Registered as a news paper. 22 JUN 2004 பக்கங்கள்: பன்னிரண்டு    விலை: ரூபா 7.00

நமது
# ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரிகம்! நாளைய நாகரிகம்!
மகாராசி சில்க்ஸ்
மங்கல நிகழ்வுகளுக்கு மகாராசியான ஸ்தாபனம்.
மகாராசி சில்க்ஸ்
59, நவீனசந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
T.P.No : 0777286247.
(#/2203)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 08 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 03 (22.06.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:263

## அலி சாகிர் மௌலானாவின் உதவியுடன்

# தப்பித்துச்சென்ற கருணாவுக்கு

# கொழும்பில் ராணுவ பாதுகாப்பு!

### டக்ளஸுடனும் உறவு வைத்திருப்பதாக நிலாவினி தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

**ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானாவின் துணையுடன் மட்டக்களப்பிலிருந்து தப்பிச்சென்ற கருணா கொழும்பில் இராணுவ புலனாய்வுத்துறையின் பாதுகாப்பில் இருப்பதாகவும் -**

**அவர் ஈ.பி.டி.பி. செயலாளர் டக்ளஸ் தேவானந்தவுடன் நெருங்கிய தொடர்பை வைத்திருப்பதாகவும் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த முன்னாள் தளபதி நிலாவினி தெரிவித்தார்.**

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து கருணா வெளியேற்றப்பட்டதையடுத்து கொழும்புக்கு கருணாவுடன் தப்பிச் சென்றவர்களான முன்னாள் மட்டு - அம்பாறை மாவட்ட மகளிர் படையணித் தளபதி நிலாவினி மற்றும் தீந்தமிழ், லாவண்யா, பிறேமினி ஆகியோர் கடந்த வெள்ளிக்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

கருணாவின் நடவடிக்கைகள் மட்டக்களப்பு மாவட்டத்தை விட்டு வெளியேறிச்சென்ற விபரங்கள் தொடர்பாக விளக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று கொக்கட்டிச்சோலை சோலையகத்தில் நடைபெற்றது.

நேற்று பிற்பகல் தளபதி ரமணன் தலைமையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டுக்கு உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்களின் ஊடகவியலாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். இம்மாநாட்டில் நிலாவினி மற்றும் மூவரிடம் ஊடகவியலாளர்கள் கேட்க, கேள்விகளுக்கு பதிலளித்தனர்.

இங்கு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு நிலாவினி பதிலளித்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா தப்பித்துச்செல்வதற்கு உதவியதை ஏற்கிறார் அலிசாகிர்

(லண்டன்)

கருணாவுக்குத் தாம் மனிதநேய அடிப்படையில் உதவிகள் செய்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான அலிசாகிர் மௌலானா பி.பி.சிக்குத் தெரிவித்தார்.

சிறுபராய நண்பரான கருணா ஏப்ரல் 12 ஆம் திகதி, தான் வெளிநாடு செல்வதற்கு போக்குவரத்து உதவி செய்யுமாறு கேட்டதாகவும் அவரை கொழும்புக்கு கொண்டு செல்வதற்கான போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக்கொடுத்த பின்னர் அவருக்கும் தனக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லையென்றும் அவர் குறிப்பிட்டார்.

கருணாவை கிழக்கிலிருந்து பாதுகாப்பாக வெளியேற்றுவதில் படைத்தரப்புக்கு எத்தகைய பங்கு இருந்தது (12 ஆம் பக்கம் பார்க்க)

## றொனி பிளேயருடன் சந்திப்பு; பிரித்தானியா ஏமாற்றிவிட்டது

### சந்திரிகா கடும் அதிருப்தி

தனது ஒருவார கால பிரித்தானிய விஜயத்தின்போது - பிரித்தானியப் பிரதமர் றொனி பிளேயரைச் சந்திக்கும் முயற்சியில் ஏற்பட்ட தோல்வி குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதிருப்தி அடைந்திருப்பதாக இணையத்தளம் ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யரை இலகுவாகச் சந்திக்க முடியாது என்று அறிவிக்கப்பட்டது.

பிரித்தானிய வெளியுறவுச் செயலகத்தின் இந்த நடவடிக்கை குறித்து ஜனாதிபதி சந்திரிகா அதிருப்தியடைந்திருப்பதுடன் பலத்த கவலையும் அடைந்துள்ளார் என வெளியுறவு அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## யாழ்.பல்கலைக்கழக ஊழியர்களின்

# நியாயமான கோரிக்கைகள் குறித்து துணைவேந்தருடன் இன்று சந்திப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக நடத்திவரும் வேலை நிறுத்தப்போராட்டம் நியாயபூர்வமானது என்று நேற்றுக் கூடிய பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அவசரக் கூட்டத்தில் பெரும்பாலானோர் கருத்துத் தெரிவித்தனர்.

அத்துடன், வேலை நிறுத்தத்

### ஆசிரியர் சங்க கூட்டத்தில் முடிவு

தருடனான சந்திப்பின்னர் முடிவு செய்வதெனவும் இந்தக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இன்று துணைவேந்தர் மோகனதாசுடன், ஊழியர் சங்கத்தினரின் போராட்டம் குறித்தும், இதனால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்தும் பேச்சுக்களை நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற ஆசிரியர் சங்கக் கூட்டத்தின்போது, ஊழியர் சங்கப் போராட்டத்தினை எதிர்க்கவில்லை என்றும், நிர்வாகம் ஊழி

(12 ஆம் பக்கம் பாக்க)

## சந்திரிகா கடும் அதிருப்தி

தனது ஒருவார கால பிரித்தானிய விஜயத்தின்போது - பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயரைச் சந்திக்கும் முயற்சியில் ஏற்பட்ட தோல்வி குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதிருப்தி அடைந்திருப்பதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

பிரித்தானிய வெளியுறவு அலுவலகம் - முன்னதாக ரொனி பிளேயர்- ஜனாதிபதி சந்திரிகா சந்திப்புக்கு ஏற்பாடு செய்து தருவதாக இணக்கம் தெரிவித்திருந்தது.

ஆனால், பின்னர் ரொனி பிளேயரை இலகுவாகச் சந்திக்க முடியாது என்று அறிவிக்கப்பட்டது.

பிரித்தானிய வெளியுறவுச் செயலகத்தின் இந்த நடவடிக்கை குறித்து ஜனாதிபதி சந்திரிகா அதிருப்தியடைந்திருப்பதுடன் பலத்த கவலையும் அடைந்துள்ளார் என வெளியுறவு அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமது பிரித்தானிய விஜயத்தை முடித்துக்கொண்டு ஜனாதிபதி சந்திரிகா நேற்று மாலை நாடு திரும்பினார். இவர் பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் ஜக் ஸ்ரோவை மட்டுமே சந்திக்க முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக நடத்திவரும் வேலை நிறுத்தப்போராட்டம் நியாயபூர்வமானது என்று நேற்றுக் கூடிய பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அவசரக் கூட்டத்தில் பெரும்பாலானோர் கருத்துத் தெரிவித்தனர்.

அத்துடன், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகள் குறித்து பல்கலைக்கழக நிர்வாகத்துக்கும், ஊழியர் சங்கத்துக்கும் இடையில் பேச்சுக்களை நடத்துவதற்கு மத்தியஸ்தராக செயற்படுவது குறித்து இன்று துணைவேந்தருடனான சந்திப்பின்னர் முடிவு செய்வதெனவும் இந்தக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## ஆசிரியர் சங்க கூட்டத்தில் முடிவு

இன்று துணைவேந்தர் மோகனதாசுடன், ஊழியர் சங்கத்தினரின் போராட்டம் குறித்தும், இதனால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்தும் பேச்சுக்களை நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற ஆசிரியர் சங்கக் கூட்டத்தின்போது, ஊழியர் சங்கப் போராட்டத்தினை எதிர்க்கவில்லை என்றும், நிர்வாகம் ஊழி

(12 ஆம் பக்கம் பாாக்க)

## பலாலி விமான ஓடுபாதையை

# இந்திய உதவியுடன் புனரமைக்கும் திட்டத்தை விமானப்படை கைவிட்டது!

(கொழும்பு)

இந்தியாவின் உதவியுடன் பலாலி விமானப்படைத் தளத்தின் விமான ஓடுபாதையைப் புனரமைப்புச் செய்யும் திட்டத்தை கைவிட விமானப் படை முடிவுசெய்திருப்பதாக விமானப்படைத் தளபதி எயார் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்திய உதவியுடன் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்வதைவிட தம்மால் குறைந்த செலவுடன் விமான ஓடுபாதையைப் புனரமைக்கமுடியும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆலோசனை வழங்கியுள்ளது.

ஓடுபாதை புனரமைப்புப் பணிகளை ஆரம்பிக்க இந்தியா தாமதம்காட்டி வருவதாலேயே விமானப்படை இந்த முடிவை எடுத்துள்ளது.

பலாலி விமான ஓடுபாதை புனரமைப்புப் பணிகள் சில மாதங்களுக்கு முன்னரே இந்திய உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இது தொடங்கப்படவில்லை.

இந்த ஓடுதளப் புனரமைப்புக்கு 500 மில்லியன் ரூபா செலவாகும் என்று தாம் திட்டமிட்டிருப்பதாக இந்திய அதிகாரிகள் அறிவித்திருந்தனர்.

இவ்வாறு புனரமைப்பு தாமதமடைவது குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அறிவித்திருந்தேன்.

நெடுஞ்சாலைகள் அமைச்சரான மஹிந்த ராஜபக்ஷ இதற்கு விமா

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசு சுறுசுறுப்புடன் செயற்படுகிறது!

## அமைச்சர் மங்கள சமரவீர கூறுகிறார்

தடைப்பட்டுப் போயுள்ள விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கான வேலைத்திட்டங்களைத் தயாரிப்பதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமையிலான அரசாங்கம் மிகவும் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளதாக அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான மங்கள சமரவீர நேற்றுத் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் பலமாக இருப்பதையே ரவூப் ஹக்கீம் விரும்புகிறாராம்!

தமிழீழ விடுதலைப்புலிகள் பலமான அமைப்பாக இருப்பதையே விரும்புவதாகவும், புலிகள் பலவீனமடைந்தால் தமிழரின் உரிமைப் போராட்டத்தில் பாதிப்புக்கள் ஏற்படும் என்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்-

புலிகள் இயக்கம் பலமான நிலையிலிருக்க வேண்டும் என விரும்பும் அதே நேரம், அரசாங்கமும் பலவீனமற்றதாக இருக்கவேண்டும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)




எக்ஸ்போஎயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் அகதி வாழ்க்கை நீக்கப்பட்டு சொந்த இடங்களில் குடியமர வழி செய்யுங்கள்

## இடம்பெயர்ந்த மக்கள் ஐ.நா. உயர்ஸ்தானிகருக்கு மகஜர்

தமிழ்மக்களின் அகதிகள் நிலை நீக்கப்பட்டு தற்போதைய சமாதான சூழலில் சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனக் கோரி வவுனியா இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்கள், ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சர்வதேச அகதிகள் தினமான நேற்றுமுன்தினம், ஐ.நா. உயர்ஸ்தானிகருக்கு அனுப்பிவைத்த மகஜரில் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கடந்த 20 வருடமாக ஏற்பட்ட யுத்தத்தினால் தமிழ்மக்களாகிய நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம். சிங்களப் பேரினவாத இராணுவ நடவடிக்கைகளினால் நடாத்தப்பட்ட தாக்குதல்களால் பல்வேறு இடப்பெயர்வுகளைச் சந்தித்து இன்னல்களை அனுபவித்துள்ளோம்.

சொந்த இடங்களிலிருந்து அநாதரவாக வெளியேற்றப்பட்டதுடன், சொத்துக்களையும், உறவுகளையும் இழந்து பரிதாபகரமான நிலையில் அகதிகள் என்று சர்வதேச நிறுவனங்களாலும், அரசினாலும் பெயர் பொறிக்கப்பட்டு அங்கலாய்த்து முகாம்களில் அடைபட்டுக் கிடக்கின்றோம்.

அகதி முகாம்களில் அடைபட்டு இருக்கும்போது சர்வதேச நிறுவனங்கள் ஏழைகளுக்கு உதவிக்கரம் நீட்டுவதாக சர்வதேசத்திற்கு வெள்ளிக்காட்டி அன்றைக்குத் தேவையான உணவையோ பிளாஸ்ரிக் பொருட்களையோ தந்து முகாம்களில் முடக்கிவைத்தனர்.

ஒரே இடத்தில் நீண்ட கொட்டகைகளில் வருடக் கணக்கில் மிக இழிவான நிலையில் வாழ்க்கையை நடத்திக்கொண்டு வருகின்ற நாம் இருப்பிட வசதியின்மை, சுகாதாரக் கேடு, குடிநீர் பற்றாக்குறை, கல்வியைத் தொடரமுடியாத நிலையில் கீழ்த்தரமான வாழ்க்கையினை அகதிமுகாம்களில் அனுபவித்துக் கொண்டு வருகின்றோம்.

அகதிமுகாம் வாழ்க்கையினை e h முழுதாக வெறுக்கின்றோம். தொடர்ந்தும் அகதி முகாம்களில் முடங்கிக்கிடக்க எங்களால் முடியாது. ஆனால், யுத்தம் நிறுத்தப்பட்டு நாட்டில் சமாதானம் ஏற்படுத்தப்பட்டு பல வருடங்கள் கடந்த நிலையிலும் எங்கள் சொந்த நிலங்களுக்கு எம்மை அனுப்பி வைப்பதற்கு எந்தவொரு சர்வதேச நிறுவனமோ அல்லது அரசாங்கமோ விரும்புவதாகத் தெரியவில்லை.

எமது சொந்த நிலங்களுக்குச் செல்ல வேண்டும். விவசாய விளை நிலங்களில் பயிர்ச்செய்கை செய்ய வேண்டும். கடற்தொழில், கைத்தொழில், சுயதொழில்களை மேற்கொள்ளவேண்டும். நாங்களும் சமூகத்தில் அந்தஸ்துள்ளவர்களாக வாழவேண்டுமென ஆசைப்படுகின்றோம். தற்போதைய சமாதான சூழலில் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் சிங்கள இராணுவம் எங்கள் நிலங்களிலிருந்து வெளியேறாமல் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைத் தம்வசம் வைத்துள்ளனர். யுத்தம் இடம்பெற்றபோது கண்மூடித்தனமாக எங்கள் நிலங்களில் விதைக்கப்பட்ட மிதிவெடிகள், கண்ணிவெடிகள், பிற அபாயம் விளைவிக்கும் பொருட்கள் போன்றவை இன்று வரை அகற்றப்படாத நிலையில் இருக்கின்றன.

எமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தும்போது உடனடியாக நலன்புரி நிலையங்களை மூட வேண்டும், எமது சொந்த நிலங்களில் மீள்குடியேற்றப்படல் வேண்டும், காணியற்றோருக்கு அரச காணிகளை பகிர்ந்தளித்தல், மீள் குடியேற்றங்களை அரசு விரைவு படுத்த வேண்டும், வீடமைப்புத் திட்டங்களுக்கு வழங்கப்படுகின்ற நிதியினை அதிகரித்தல்,

மீள்குடியேறிய பின்னர் நாங்கள் சொந்த வருமானத்தை உழைக்கும் வரைக்கும் போதுமான நிவாரணங்கள் வழங்கப்படல் வேண்டும், தொழிலற்றவர்களில் ஒரு குடும்பத்தில் ஒருவருக்கேனும் தொழில்வாய்ப்பினை வழங்கல் வேண்டும்,

குடியமர்த்தப்படும் பிரதேசங்களில் சுயதொழில் வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும், குடியமர்த்தப்படும் பிரதேசங்களில் கல்வி, சுகாதாரம், வைத்திய சமூகசேவைகளை ஏற்படுத்த வேண்டும், குடியமர்த்தப்படும் பிரதேசங்களிலுள்ள கண்ணி வெடிகள், மிதிவெடிகள், பிறவெடி பொருட்கள் அகற்றப்பட்டு உறுதி செய்யப்படல் வேண்டும்,

உயர் பாதுகாப்பு வலயம், சூனியப் பிரதேசம் என்ற போர்வையில் இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருக்கும் எமது வீடுகள், நிலங்கள் விடுவிக்கப்படல் வேண்டும். அங்கு சுயமாகவும், சுதந்திரமாகவும் வாழ்வு நடத்த ஏற்ற இயல்பு நிலை உறுதி செய்யப்படல்வேண்டும்.

இதன் பிரதிகள் ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை, இலங்கை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை சமூக பாதுகாப்பு அமைப்பு, வவுனியா மாவட்ட அரச சார்பற்ற ஒன்றியம் ஆகியவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# சின்னஞ்சிறு செய்திகள்

### அங்கவீனர்களின் தேவைகள் தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள அங்கவீனர்களின் தேவைகள் குறித்து ஆராயும் கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் பிரதேச செயலர் ரீதியாகப் பணியாற்றும் அங்கவீனர்களின் விபரம் திரட்டும் தொண்டர்கள், சமூகசேவை உத்தியோகத்தர்கள் முதலானோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப)

### மிதிவெடி அபாயக் கல்வி வாரம

மிதிவெடி அபாயக் கல்வி வாரமாக நேற்றுமுதல் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை அனுஷ்டிப்பதற்கு யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் பிரகடனம் செய்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் குடாநாடு தழுவிய ரீதியில் மிதிவெடி பற்றிய பல்வேறு செயற்திட்டங்கள் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மிதிவெடி அபாயக் கல்வித் திட்டத்தின்கீழ் கருத்தரங்குகள், பிரசாரங்கள், துண்டுப் பிரசுரங்கள் என்பன கிராமிய ரீதியாக விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### வாசகர் வட்டக் கூட்டம்

வலி. தெற்கு பிரதேசசபையின் உடுவில் உப அலுவலக பொது நூலக வாசகர் வட்ட கூட்டம் நாளை மாலை 4 மணிக்கு நூலகர் க. வைகுந்தவாசன் தலைமையில் நூல் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வாசகர் வட்ட அங்கத்தவர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு பிரதேச சபை கோரிக்கை விடுத்துள்ளது. (101)

### மல்லாகம் மாதா கோவில் கொடியேற்றம்

மல்லாகம் சதா சகாய மாதா ஆலய பொன்விழா ஆண்டு நவநாள் நிகழ்வுகள் கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பமாகின.

26 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு நற்கருணை விழாவும், மறுநாள் காலை 7 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுப்பலி - யாழ். ஆயர் சௌந்தரநாயகம் தலைமையில் இடம்பெறும்.

தினமும் மாலை 5.30 மணிக்கு செபமாலை பிரசங்கம், திருப்பலி, ஆராதனைகள் நடைபெறும். திருநாள் திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி இடம்பெறும்.(206)


நிறைஞ்சனாஸ் சங்கானை
ரவிச்சந்திரன், ஜெயலலிதா, அசோகன், நாகேஷ் நடித்த
(புதிய பிரதி ரீல்ஸ்) நான்
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
EHPOSURE
(சி-2621)

ராஜா யாழ்ப்பாணம்.
விக்ரம், ஜோதிகா, வடிவேல் நடித்த

அருள்
அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க 25 முதல் கில்லி
காட்சிநேரம்:-10.30,2.30,6.30மட்டும் (பு.நே)
(சி-2623)

நாகம்ஸ் சுன்னாகம்
மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன் விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த

கில்லி
(ரீல்ஸ்)
நாளை முதல் சூர்யா, மாதவன், மீராஜாஸ்மின், ஈஷா நடித்த ஆய்த எழுத்து
(சி-2622)
தினசரி காட்சிகள் : 11.00. 3.00. 7.00 (பு.நே)



# உடனடி வேலை வாய்ப்பு

## தமிழீழ தேசியத் துணைப்படை தமிழீழம்

தமிழீழ தேசியத் துணைப்படைக்கு உறுப்பினர்களை இணைத்துக்கொள்ளும் முகமாக தமிழீழப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வயதெல்லை :- 18 தொடக்கம் 25 வரை
2. உடற்தகமை :- தேக ஆரோக்கியம் நன்றாக இருத்தல் வேண்டும்.
3. சம்பளம் :- ரூபா 8500/= மாதமொன்றிற்கு

விண்ணப்பதாரிகள் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ காவல்துறையின் நடுவப்பணியகத்திற்கு எதிர்வரும் 23.06.2004 தொடக்கம் 30.06.2004 வரை சமூகம்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

குறிப்பு:- ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

பொறுப்பாளர்,
ஆளணிப்பிரிவு,
காவல்துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி-2685)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தளத்தில் புலிகளால் புதிய முகாம் அமைப்பாம்

புத்தளத்தில் விடுதலைப் புலிகள் புதிதாக முகாம்களை அமைத்திருப்பதாக படையினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

புத்தளம் - மன்னார் வீதியிலே இந்த முகாம் அமைக்கப்பட்டிருப்பதாக குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்த முகாம்களில் இருநூறுக்கும் மேற்பட்ட ஆயுதந்தாங்கிய விடுதலைப் புலிப் போராளிகள் தங்கியிருப்பதாக படையினர் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகள் புதிதாக அமைத்துள்ள இந்த முகாம்களினால், வண்ணாத்திவில்லுப் பகுதியிலிருந்து தொழிலுக்குச் செல்லும் மீனவர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக படையினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். (01)

## மடுமாதா ஆடிப்பெருவிழா நாளை ஆரம்பம்

மடு அன்னையின் ஆடிப் பெருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, ஜுலை மாதம் இரண்டாம் திகதிவரை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி தொடக்கம் இரண்டாம் திகதிவரை உயிலங்குளமூடான பாதை 24 மணிநேரமும் திறந்து விடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (201)

# நகரசபைத் தலைவர்களுக்கு பொலிஸாரின் பாதுகாப்பு!

நாட்டிலுள்ள அனைத்து நகர சபைத் தலைவர்களுக்கும் பொலிஸ பாதுகாப்பு வழங்குவதற்கு பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

நகர சபைத்தலைவர்களுக்கான அச்சுறுத்தல்களும், கொலை மிரட்டல்களும் அதிகரிக்கப்பட்டுள்ளதை அடுத்து, நகரசபைத் தலைவர்கள் விடுத்த கோரிக்கையினைக் கருத்திற்கொண்டு இந்த முடிவினை எடுத்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

நகரசபைத் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் இரு பொலிஸ் கொன்ஸ்டபிள்கள் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (01)

# ஈழராஜ்யமும் -தர்மராஜ்யமும் ஒருபோதுமே சேரமுடியாது!

## ஜாதிக ஹெல உறுமய கூறுகிறது

ஈழராஜ்யமும், தர்மராஜ்யமும்- ஆகாயமும் வானமும் போன்றது. இவையிரண்டும் ஒருபோதும் சேர முடியாது என ஜாதிக ஹெல உறுமயவின் பிரதான அமைப்பாளர் கொலன்னாவ சிறி சுமங்கல தேரர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிக் கூட்டமைப்பில் ஜாதிக ஹெல உறுமய சேர்ந்திருப்பது தொடர்பாக - ஊடகவியலாளர் ஒருவர் கேட்டதற்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

நாம் கூறும் தர்மராஜ்யம் என்பது விடுதலைப் புலிகள் கூறும் ஈழராஜ்யத்துககு முரணானது. இவை இரண்டும் என்றும் ஒன்றுபடமாட்டாது. இரண்டும் தனித்தனியே உருவாகுவது கடினம்.

ஈழராஜ்யம் அமைவதென்பது வானமும், பூமியும் ஒன்றாவதற்குச் சமனானது, அது நடக்கமுடியாது. நாம் எதிர்க்கட்சிக் கூட்டணியில் இணைந்திருப்பது ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் நீதிநெறி தவறி நடப்பதை எதிர்ப்பதற்காகவே.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் நாடாளுமன்றம் வந்திருக்கும் கட்சியுடன் இணைந்துள்ளோம் என்பதற்காக, நாம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்துவிட்டோம் எனக்கூறிவிட முடியாது.

தேசியப் பிரச்சினைக்கும் அப்பால், எமது நாடு சிங்கள பௌத்த நாடு என்கின்ற கோட்பாட்டை எவரும் மாற்றமுடியாது. மாற்றவும் விடமாட்டோம்.

எமது நாடு பௌத்தத்துக்கு காணிக்கையாக்கப்பட்டுள்ள நாடு. இதனைப் பாதுகாக்க வேண்டியது பௌத்த பிக்குகளாகிய எங்களதும், பௌத்த மக்களினதும் பாரிய கடமையாகும்.

இந்தத் தங்கத்தீவினைப் பாதுகாக்கவும், பௌத்தத்தைக் காக்கவும் எமது வாழ்க்கை, உயிர் எனபனவற்றையும் அர்ப்பணித்து சேவைபுரியவுள்ளோம.

தமிழீழ ராஜ்யம் என்பது வெறும் கற்பனையான கதை. இதற்காக நாம் அரசின் செயற்பாடுகளுக்கு இணங்கப் போகமுடியாது.

நடைபெறாத, நடைபெறமுடியாத ஒன்றைப் பற்றிப் பேசுபவர்களைப் பற்றி எமக்குக் கவலையில்லை. எமது நாடு பாதுகாக்கப்படல் வேண்டும் என்பதே, எமது பிரதான நோக்கம் என அவர் மேலும் அங்கு தெரிவித்தார்.

# பிக்குகள் மீதான தாக்குதல் ஜனாதிபதிக்கும் தொடர்புள்ளது!

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



நாடாளுமன்றத்தில் பௌத்த பிக்குகள் இருவர் தாக்கப்பட்ட சம்பவத்துககும், ஜனாதிபதிக்கும் தொடர்பிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விககிரமசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாத்தளைக்கு விஜயம் செய்த எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச்சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது -

நாடாளுமன்ற அமர்வுகளின்போது, ஏற்பட்ட குழப்பத்தில் இரு பிக்குகள் தாக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற பின்னர், ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். இதன்போது, பிக்குகள் தாக்கப்பட்டமைக்கு மன்னிப்புக் கோரவில்லை. ஜனாதிபதியின் இந்த நடவடிக்கைக்கும், பிக்குகள் தாக்கப்பட்டமைக்கும் தொடர்பு இருப்பதாகவே சந்தேகம் எழுந்துள்ளது.

தாக்குதலுக்குள்ளான கொலன்னாவ சுமங்கல தேரரை வைத்திய பரிசோதனைக்குட்படுத்தியபோது, ஆயுதங்களால் தாக்கப்பட்டமைக்கான தடயங்கள் இருப்பதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த எதிர்கட்சித் தலைவர் - இது அரசாங்கத்தின் திட்டமிட்ட செயல் எனவும் குற்றஞ்சாட்டினார். (01)

# பிக்குகள் மீதான தாக்குதல் கண்டித்து சத்தியாக்கிரகம்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கொலன்னாவ ஸ்ரீ சுமங்கல தேரர் நாடாளுமன்றத்தில் வைத்து தாக்கப்பட்டமையைக் கண்டித்து, நேற்றுமுன்தினம் சத்தியாக்கிரகம் ஒன்று நடைபெற்றது.

இராஜகிரியவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஏராளமான பிக்குகள் கலந்துகொண்டனர்.

இதேபோன்றதொரு சத்தியாக்கிரகம் நேற்றுமுன்தினம் பொலனறுவைப் பகுதியிலும் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தின சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்துகொண்ட பிக்குகள் - பௌத்த சாசன அமைச்சர் மற்றும் பிரதமர் ஆகியோர் நாடாளுமன்றில் பிக்குகள் தாக்கப்பட்டமைக்குப் பகிரங்க மன்னிப்புக் கோரவேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

# இராணுவத் தளங்களுக்கு விஜயம் செய்கிறார் பலகல்ல

இராணுவத் தளபதி பதவியிலிருந்து இந்தமாத இறுதியில் ஓய்வுபெறவிருக்கும் லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள இராணுவத் தளங்களுக்கும் விஜயம் செய்து பிரியாவிடை பெற்று வருகிறார்.

கடந்த வெள்ளிக்கிழமையன்று தியத்தலாவவிலுள்ள விமானப்படைத்தளத்தில் பயிறசியை முடித்து வெளியேறும் படையினரின் அணிவகுப்பு நிகழ்வில் கடந்த வெள்ளிக்கிழமை கலந்துகொண்ட இராணுவத் தளபதி லெப்ஜெனரல் லயனல் பலகல்ல - படையினர் நாட்டுக்காக சேவையாற்றத் தயாராக இருக்கவேண்டும் என்று தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த அணிவகுப்பு நிகழ்வில், கொத்தலாவல பாதுகாப்பு அக்கடமி, கடெற் அதிகாரிகள் பயற்சி, அடிப்படை அதிகாரிகள் கடெற் பயிற்சி, நிரந்தர படையினருக்கான அடிப்படைப் பயிற்சி ஆகியவற்றை முடித்த படையினர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் கடற்படை மற்றும் விமானப்படைத் தளபதிகளும் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வை முடித்துக்கொண்டு, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல - ஹெலிகொப்ரர் மூலமாக மன்னார் மற்றும் வவுனியாப் பகுதிகளுக்கு விஜயம் செய்தார்.

வவுனியா, மன்னாப் பகுதியிலுள்ள தளங்களில் அதிகாரிகள் மற்றும் படையினருக்கு இவர் தமது பிரியாவிடை உரையை நிகழ்த்தினார். இதன்போது படையினருக்கு சமாதான முயற்சிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் எடுத்துக் கூறினார்.

இந்த மாத இறுதியில் ஓய்வுபெறவுள்ள பலகல்ல- நேற்று யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்து, படையினரிடம் பிரியாவிடை பெறத் திட்டமிட்டிருந்தபோதும், இந்தப் பயணம் பிற்போடப்பட்டிருக்கிறது. இதேவேளை, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்லவின் பதவிக்காலம் மேலும் ஆறு மாதங்கள் நீடிக்கப்படலாம் என்ற கருத்தும் நிலவுவது குறிப்பிடத்தக்கது.

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ரஷ்யா ஆதரவு தெரிவிப்பு

பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறைமை என்பன பாதிக்கப்படாமல், இலங்கையின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுமாக இருந்தால், அதற்கு ரஷ்யா தனது ஆதரவை முழுமையாக வழங்குமெனத் தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடன் மொஸ்கோவில் ரஷ்யத் தலைவர்கள் நடத்திய சந்திப்பின்போது, மேற்கண்ட உறுதிமொழியைத் தெரிவித்தனர்.

வெளிவிவ்கார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ரஷ்யா சென்றுள்ளார். அங்கு அவர் இருநாடுகளுக்குமிடையில் அரசியல், பொருளாதாரம், வர்த்தகம், தொழிநுட்பம், கல்வி மற்றும் இராணுவ ஒத்துழைப்புகள் தொடர்பாக - அந்தநாட்டு தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றார்.

லக்ஷ்மன் கதிர்காமரின் ரஷ்ய விஜயம் தொடர்பாக, கொழும்பிலுள்ள ரஷ்யத் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது-

இரு பகுதிக்கும் இடையில் தொடரவுள்ள பேச்சுவார்த்தையில் முக்கியமான சர்வதேச விடயங்களான சர்வதேச மற்றும் உள்நாட்டு பயங்கரவாதம், மதவாதம், இராணுவப் பிரிவினைவாதம், அத்துடன் இரு நாடுகளுக்குமிடையிலான ஸ்திரத்தனமை, மற்றும் ஈராக், ஆப்கான், மத்திய கிழக்கு நாடுகளின் தற்போதைய நிலைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், தென்ஆசியாவில் பயங்கரவாதத்துக்கெதிராக இலங்கை எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ரஷ்யா தனது முழு ஆதரவையும் வழங்கும்.

இரு நாடுகளும் இணைந்து முக்கியமான விடயங்களில் செயற்படவுள்ளதாகவும், இருநாடுகளுக்கிடையேயான வர்த்தகம் மற்றும் கல்வித் தொடர்பில் முக்கிய கவனத்தைச் செலுத்துவது தொடர்பாகவும் பேசப்படுமென்வும் அந்த அறிக்கை தெரிவித்தது.

# கைப்பற்றப்பட்ட இந்தியப் படகுகள் அரசுடமையாக்குவதற்கு முடிவு

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்தமையால், கைப்பற்றப்பட்ட சகல இந்திய மீனவர்களின் மீன்பிடிப்படகுகளையும் அரசுடமையாக்கப்படுவதென தீர்மானமெடுக்கப்பட்டுள்ளதாக மீன்பிடி அமைச்சர் சந்திரசேன விஜயசிங்க தெரிவித்தார்.

இலங்கையின் வடக்கு - கிழக்கு உள்ளிட்ட சகல கடற்பரப்பிலும் வைத்து கைப்பற்றப்பட்ட 54 இந்திய மீன்பிடிப் படகுகள் தற்போது நீதிமன்றங்களில் பாரப்படுத்தப்பட்டுள்ளன.

இவை அனைத்தையும் அரசஉடமையாக்குவதுடன், இனிவரும் காலங்களில் இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடிக்கும் பிறநாட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல்கள்கூட இலங்கைத்துறை முகத்தில் தரித்துச் செல்லமுடியுமேயன்றி இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடித்தலில் ஈடுபடமுடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# இரண்டு சடலங்கள் மீட்பு

இந்தியாவிலிருந்து தலைமன்னார் நோக்கிவந்த ஈழத்தமிழ் அகதிகளின் படகு கடலில் மூழ்கியதில் 12 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில், இப்பகுதியிலிருந்து இருவரின் சடலங்களை இலங்கைக் கடற்படையினர் நேற்றுமுன்தினம் மீட்டனர்.

கடந்த ஐந்து தினங்களுக்கு முன்பே 13 பேருடன் இராமேஸ்வரத்திலிருந்து மன்னார் திரும்பிக்கொண்டிருந்த படகே கடலில் மூழ்கியதாக தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு கடலில் மூழ்கிய படகிலிருந்து ஒருவர் தப்பி கடந்த சனிக்கிழமை மன்னாரை வந்தடைந்தார். இவர் கொடுத்த தகவலின் அடிப்படையிலேயே, கடற்படையினர் சம்பவம் நடைபெற்றதாக கூறப்படும் கடற்பகுதியில் தேடுதல் நடத்தி - இருவரது சடலங்களை மீட்டனர்.

# ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தை மீள இயக்கும் எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை

ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து, நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர்கள் சம்பத்பண்டார கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து பல்கலைக்கழகம் மூடப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் இடம்பெற்று இரண்டு வாரங்களுக்கு மேலாகியும், பல்கலைக்கழகத்தை மீள இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனையடுத்து பல்கலைக்கழகத்தை மீள இயக்குவது குறித்து நேற்றுமுன்தினம் மாணவர் பிரதிநிதிகளுக்கும், துணைவேந்தர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலில், மீள இயக்குவது குறித்து எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என மாணவர் தரப்பு தெரிவித்துள்ளது.

மாணவர்களிடையே பழிவாங்கும் உணர்வு தற்போதும் இருப்பதால், வன்முறைச் சம்பவங்கள் ஏற்படுமோ என்ற அச்சத்தினால் உடனடியாக மள இயக்குவதற்கு பல்கலைககழக நிர்வாகம் பின்னடித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்பெயின் அணியைத் தோற்கடித்து காலிறுதிக்கு போர்த்துக்கல் நுழைவு!

(லிஸ்பன்)

ஐரோப்பிய கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த, 'ஏ' பிரிவின் இறுதி லீக் ஆட்டத்தில், ஸ்பெயின் அணியைத் தோற்கடித்ததன் மூலம் போர்த்துக்கல் அணி காலிறுதிப் சுற்றுக்குள் நுழைந்தது.



'ஏ' பிரிவில் 3 புள்ளிகளுடன் இருந்த போர்த்துக்கல் அணி, இந்தப் போட்டியில் எப்படியாவது வென்றேயாக வேண்டும் என்ற நெருக்கடியான நிலையில் இருந்தது.

இதனால், லிஸ்பனில் நடைபெறும் போட்டி, மிகவும் விறுவிறுப்பாக அமையும் எனக் கருதி, சுமார் 47 ஆயிரத்து 500 ரசிகர்கள் மைதானத்தில் குவிந்திருந்தனர்.

ஆட்டம் ஆரம்பித்தவுடனேயே போட்டி விறுவிறுப்படைந்தது. கணிசமான நேரத்திற்கு பந்தைத் தம்வசம் வைத்துக்கொண்டு விளையாடிய போர்த்துக்கல் வீரர்கள், கோல் அடிக்க பெரும் முயற்சி செய்தனர்.



முதல் பாதி ஆட்டத்தில் இரண்டு அணி வீரர்களும் கோல் எதனையும் போட முடியாமற் போனது.

இதனால், இரண்டாவது பாதி ஆட்டம் மேலும் விறுவிறுப்படைந்தது. இரு அணிகளுக்குமிடையிலான பலப்பரீட்சையில் அவ்வப்போது முரட்டுத்தனமான ஆட்டமும் வெளிப்பட்டது.

இதனால், ஸ்பெயின் அணி வீரர்கள் மூவருக்கும், போர்த்துக்கல் அணி வீரர்கள் இருவருக்கும் மஞ்சள் அட்டை காண்பித்து நடுவர் எச்சரிக்கை செய்தார்.

இந்த நிலையில் போர்த்துக்கல வீரர் பொலிற்றாவுக்குப் பதிலாக களமிறங்கிய நமனா சோமஸ், ஆட்டத்தில் 57 ஆவது நிமிடத்தில் எதிர்பாராதவிதமாக கோல் அடித்தார்.

20 யார் தொலைவிலிருந்து வலது காலால் இவர் அடித்த பந்து கோலாக மாறியதை ஸ்பெயின் அணியினர் அதிர்ச்சியுடன் பார்த்து நின்றனர்.

இதனையடுத்து ஸ்பெயின் வீரர்கள் பதிலுக்கு எப்படியாவது ஒரு கோலையேனும் அடித்துவிடவேண்டும் என்று கடுமையாகப் போராடினர்.



ஆனால், பின்னர் கிடைத்த வாய்ப்புக்களை கோலாக மாற்றுவதற்கு போர்த்துக்கல் வீரர்கள் இடமளிக்கவில்லை. இதனால் 1-0 என்ற அடிப்படையில் போர்த்துக்கல் அணி வெற்றிபெற்றது.

இதன்மூலம் 'ஏ' பிரிவில் 6 புள்ளிகளுடன் காலிறுதிக்குள் நுழையும் முதல் நாடாக போர்த்துக்கல் தெரிவானது.

அதேவேளை - ரஷ்யாவை 1-0 என்ற அடிப்படையால் வென்றும் கிறிஸ் அணியை 1-1 என்ற அடிப்படையில் சமநிலையும் பெற்ற ஸ்பெயின் அணி, 4 புள்ளிகளைப் பெற்றபோதும் காலிறுதிக்குள் நுழையும் வாய்ப்பைப் பெறமுடியவில்லை.

# கிறீஸ் அணியை வீழ்த்தியபோதும் காலிறுதி வாய்ப்பை ரஷ்யா இழந்தது!

'ஏ' பிரிவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இன்னொரு இறுதி லீக் ஆட்டத்தில் ரஷ்ய அணியிடம் கிறீஸ் அணி தோல்வி கண்டபோதும், பெற்ற கோல்களின் அடிப்படையில் கிறிஸ் அணி காலிறுதிப் போட்டிக்குச் செல்லும் வாய்ப்பைப் பெற்றது.



'ஏ' பிரிவில் ஏற்கனவே நடந்த இரண்டு போட்டிகளில் தோல்வியடைந்திருந்த ரஷ்ய அணி கிறீஸ் அணியுடனான போட்டியில் எப்படியாவது வென்றுவிட வேண்டும் என்று களம் இறங்கியது.

ஆட்டத்தில் ஆரம்பமே ரஷ்யாவின் அதிர்ச்சி வைத்தியமாகத் தொடங்கியது. ஆட்டம் ஆரம்பித்த 68 ஆவது செக்கனில், ரஷ்ய வீரர் டிமிறி கிறிசென் கேடி கோல் ஒன்றை அடித்தார்.

ஐரோப்பிய கிண்ண உதைபந்தாட்ட வரலாற்றில் மிகக்குறுகிய நேரத்தில் அடிக்கப்பட்ட கோலாக இது சாதனை படைத்தது.

இதன்பின்னர் ரஷ்ய வீரர்கள் விறுவிறுப்பாகவும், வேகமாகவும் ஆடினர். இதனால் ரஷ்ய அணி வீரர்கள் இன்னொரு கோலை அடித்து ரஷ்ய அணியை வலுப்படுத்தினர்.




ஆட்டத்தில் முன்னிலை பெற்றிருந்தாலும், ரஷ்ய வீரர்கள் முரட்டுத்தனமாகவும் விளையாடினர். இதனால் ரஷ்ய வீரர்கள் 6 பேர் மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டு நடுவரால் எச்சரிக்கப்பட்டனர்.

கிறீஸ் அணி வீரர்கள் இருவருக்கும் மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டது.

ஆயினும், முதல் பாதி ஆட்டத்தில் மிகுந்த போராட்டத்தின் மத்தியில் 44 ஆவது நிமிடத்தில் கிறீஸ் அணி ஒரு கோலை அடித்தது. ரைசஸ் இந்தக் கோலை அடித்தார்.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளுமே கோல் எதனையும் போடமுடியாமல் போனதால் ரஷ்ய அணி 2 - 1 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.



சுமார் 25 ஆயிரம் ரசிகர்கள் கூடியிருந்து பார்வையிட்ட இந்தப் போட்டியில் வெற்றிபெற்ற போதிலும் காலிறுதிப் போட்டிக்கு செல்லும் வாய்ப்பு ரஷ்யாவுக்குக் கிடைக்கவில்லை.

ரஷ்யாவிடம் தோல்வி கண்டபோதிலும் கிறீஸ் அணி காலிறுதிக்குத் தகுதிபெற்றது. ஸ்பெயின் அணியும் கிறீஸ் அணியும் தலா 4 புள்ளிகளைப் பெற்றிருந்தன.

இதனால், 'ஏ' பிரிவிலிருந்து காலிறுதிப்போட்டிக்குச் செல்லும் அணியைத் தெரிவுசெய்வதற்காக, இரு அணிகளும் அடித்த கோல்கள் கணிப்பிடப்பட்டன.

இதன் அடிப்படையில், 4 கோல்களை அடித்த கிறீஸ் அணி, காலிறுதிக்குத் தெரிவானது.

## கே.சி.சி.சி. கிண்ண கிரிக்கெட் போட்டி

# ஸ்ரான்லி, சென்ரலைட்ஸ் அணிகள் மிக இலகுவாக வெற்றி பெற்றன!

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்படும் கே.சி.சி. வெற்றிக்கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கிராஸ் கொப்பர் அணியைத் தோற்கடித்து ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர் விளையாட்டுக்கழக அணி, 24 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் - விசந்தன் -26, மயூரன் - 19, கிருபாகரன் -17 ஓட்டங்களைப் பெற்றனர். ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணி சார்பில் பந்துவீசிய சுகிர்தன் மற்றும் குகன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், றொசான் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணி 13 ஓவர்களிலேயே 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 139 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

இந்த அணி சார்பில் சங்கர் - 35, செல்வராசா - 34, சாந்தகுமார்




- ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும் பெற்றனர். கிராஸ் கொப்பர் அணி வீரர் றொகான் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற இன்னொரு போட்டியில், சென்றல் விளையாட்டுக் கழகத்துக்கு எதிரான போட்டியில் சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றல் விளையாட்டுக்கழக அணி, 23 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றது.

இந்த அணி வீரர்களான ஈழமாறன் - 31, நிரோஷன் -16 ஓட்டங்களைப் பெற்றனர். சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் பந்துவீசிய ராஜ்குமார், பிரகாஷ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதையடுத்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி ௮ ஓவர்களிலேயே - 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 97 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இந்த அணி சார்பில் துடுப்பெடுத்தாடிய பிருந்தாபன் - 37, சார்த்தீபன் - 22 ஓட்டங்களைப் பெற்றனர். சென்றல் அணி வீரர் விமலகாந்த் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

## கரும்புலிகள் நினைவு உதைபந்தாட்டத்தில் இன்று!

தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ் மாவட்டப் பிரிவு பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் வல்வை விளையாட்டுக் கழகம்,- கரும்புலிகள் நினைவாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில்

இன்று பி.ப 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் சென்றொக்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென் மேரிஸ் விளையாட்டுக்கழகமும். பி.ப 4.30 மணிக்கு அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பாடும் மீன் விளையாடுக்கழகமும் மோதவுள்ளன.

இப்போட்டிகள் வல்வை தீருவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும்.

# கரும்புலிகள் நினைவாக விளையாட்டுப் போட்டிகள்!

எதிர்வரும் யூலை 05ம் திகதி கரும்புலிகள் நாளை முன்னிட்டு வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் விளையாட்டுப் போட்டிகளும் பாடசாலை மாணவர்களுக்கு இடையேயான போட்டிகளும் இடம் பெறவுள்ளன.

கழகங்களுக்கிடையிலான போட்டிகள், திறந்த போட்டிகளாக, தரையிலும், கடலிலும் இடம்பெறவுள்ளன.

கடலிலே - நீச்சல் போட்டி, படகோட்டப்போட்டி, மரம் வலித்தல் போட்டி என்பனவும் தரையிலே மரதன் ஓட்டம், கயிறிழுத்தல், தலையணைச் சண்டை என்பனவும்

மாணவர்களுக்கிடையே கவிதை, கட்டுரை, பேச்சு ஆகிய போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

சகல போட்டிகளிலும் வெற்றியீட்டியவர்களுக்கு கரும்புலி நாள் அன்று சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இரவு கலைநிகழ்வுகள் நாடகங்கள் இடம்பெறவுள்ளன. (122)

# நான் 'வன் மான் ஆமி' அல்ல சச்சின் டெண்டுல்கர் தெரிவிப்பு!



(பெங்களூர்)

விளையாட்டில் வெற்றி, தோல்விகள் சகஜம் என்றும், தான் ஒரு 'வன் மான் ஆமி' அல்ல என்றும் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கான உடற்தகுதி பயிற்சிமுகாம்; பெங்களூரில் நடைபெற்றது. அடுத்த மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான உடற்தகுதி முகாமில் கலந்துகொண்டுள்ள சச்சின், நிருபர்களுக்கு அளித்த பேட்டியின் விவரம் பின்வருமாறு -

இந்திய அணியில் புதிய துடுப்பாட்ட வராகள் எழுச்சி பெறுவதற்கு முன்பு, சச்சின் நன்றாக விளையாடினால் தான் இந்திய அணி வெற்றிபெறும், இல்லையென்றால் தோல்வியடையும் என்ற கருத்து நிலவியது பற்றிய கேள்விக்குப் பதிலளித்த சச்சின், இதனைக் கடுமையாக மறுத்தார். நான் ஒரு வன் மான் ஆமி அல்ல என்பதையும் சச்சின் சுட்டிக்காட்டினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

வன் மான் ஆமி என்ற விடயத்தல் எனக்கு எப்போதுமே நம்பிக்கை இல்லை. இந்திய அணிதான் விளையாடுகிறது என்ற எண்ணம்தான் எப்போதும் என்னிடம் இருந்து வருகிறது. என்னைத் தவிர அணியில் இடம்பெற்றுள்ள 10 வீரர்களும் சர்வதேச தரம் மிக்க சிறந்த வீரர்கள் என்பதில் எந்த மாற்றமும் இல்லை.

வெற்றி தோல்வி என்பது விளையாட்டில் சகஜம். அணியில் இடம்பெற்றுள்ள துடுப்பாட்ட வீரர்கள் எல்லோரும் எப்போதுமே ஓட்டங்களைக் குவித்துவிட முடியாது. பந்துவீச்சாளர்களும் எப்போதும் வக்கெட்டுக்களை வீழ்த்திக்கொண்டிருக்க முடியாது என்றார்.

# யுவராஜ், சோப்ரா இருவரும் சிறந்த தொடக்க வீரர்கள்!

## இந்திய தேர்வுக்குழுத் தலைவர் தெரிவிப்பு

யுவராஜ்சிங், ஆகாஷ் சோப்ரா இருவருமே எத்தகைய சூழ்நிலைக்கும் ஏற்றவாறு விளையாடக்கூடியவர்கள் என்று இந்திய கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழுத் தலைவர் சையத்கிர்மானி தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளரான சையத்கிர்மானி, 88 டெஸ்ட் போட்டிகளிலும் 49 ஒருநாள் போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியில் தொடக்க ஆட்ட வீரர் விடயம் தற்போது பரபரப்பாக பேசப்பட்டுவருகிறது. யுவராஜ்சிங்கிற்கு ஆதரவாக கப்டன் கங்கூலியும், சோப்ராவிற்கு ஆதரவாக மற்றொரு தொடக்க ஆட்ட வீரரான ஷேவாக்கும் சச்சினும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் இது தொடர்பாக தனது கருத்தைத் தெரிவித்த சையத்கிர்மானி -

நின்று நிதானமாக விளையாடுபவருக்கே எனது ஆதரவு என்றாலும், எத்தகைய சூழ்நிலையிலும் சிறப்பாக விளையாடக்கூடிய திறமை இவர்கள் இருவரிடமும் உள்ளது. அணியில் இருவரையும் எப்படிப் பயன்படுத்துவது என்பது பற்றி ஆலோசிக்கவுள்ளோம்.

இதுகுறித்து, ஷேவாக், சச்சின், கங்கூலி ஆகியோர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இவர்கள் கூறிய கருத்தில் எவ்வித சர்ச்சையும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

அணியின் நலனைக் கருத்திற் கொண்டே வீரர்கள் கருத்துக் கூறியிருந்தாலும், தற்போது சிறப்பாக விளையாடிக் கொண்டிருக்கும் இந்திய அணியை தொந்தரவுசெய்ய - மாற்றம் செய்ய விரும்பவில்லை என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடுந்தீவு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவுக்கான மாதாந்த அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 11.00 மணிக்கு நெடுந்தீவு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில், உதவி அரசாங்க அதிபர் எஸ்.பேரானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் உலர் உணவு நிவாரண விநியோகம், துரித அபிவிருத்தித் திட்டம், உலக உணவுத் திட்டம், போக்குவரத்து, மின்சாரம், நீர் விநியோகம், கல்வி, சுகாதாரம், மருத்துவ சேவை, வீதி அபிவிருத்தி, மீன்பிடி, கமநலசேவை போன்ற விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

இதேவேளை, கடந்த மாதம் இடம்பெற்ற கூட்டத்திலே, இந்த மாதத்திற்கான கூட்டத்தினை யாழ். அரச அதிபரின் அனுமதியுடன் யாழ். மாவட்டத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யும் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(113)

# சிறந்த சமூகத்தை உருவாக்கும் பொறுப்பு முன்பள்ளி ஆசிரியர்களிடமே உள்ளது!

## துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன்

(யாழ்ப்பாணம்)

எமது சமுதாயத்தில் சிறந்த கல்விச் சமூகத்தை உருவாக்குவதில் பெரும் பங்காற்றுபவர்கள் முன்பள்ளி ஆசிரியர்கள். இவ்வாறு யாழ். மாவட்ட துணை அரசியற் துறைப் பொறுப்பாளர் செம்மணன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் வலிகாமம் கிழக்கு தேசிய எழுச்சிப் பேரவையில் நடத்தப்பட்ட முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நிறைவு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

எதிர்காலத்தில் நாம் உச்ச வளர்ச்சியை அடைய இப்போதுள்ள எமது சிறுவர்களை சிறந்த முறையில் கல்வி அறிவுள்ளவர்களாக வளர்க்கவேண்டும். எமது மக்களிடையே அடிப்படைச் சமூக விழிப்புணர்வுத் தன்மை மேலோங்க வேண்டும்.

எதிர்வரும் காலங்களில் எமது கல்விமுறைகளில் மாற்றம் கொண்டு வந்து சர்வதேச தரத்துக்கு உயர வேண்டும்.

எமக்கு முழுமையான விடுதலை கிடைத்த பின்புதான் எமது பிரதேசத்தில் முழுமையான அபிவிருத்தியை மேற்கொள்ளமுடியும். எனவே, நாம் எமக்கான விடுதலையை விரைவுபடுத்தவேண்டும். எமது வரலாறு யுத்தம், சமாதானம், அபிவிருத்தி எனத் தொடர்ந்து செல்கின்றது. எமது தலைவரின் காலத்திலேயே எமக்கு நிரந்தரத் தீர்வொன்று கிட்டும். எமது இராணுவ அரசியல் பலம் தற்போது ஒருமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில்தான் தென்னிலங்கையில் பல அரசியல் குழப்ப நிலைகள் தோற்றுவிக்கப்படுகின்றன. தற்போது ஜனாதிபதிக்குச் சார்பான சக்திகள் புலிகளை வலிந்து யுத்தத்துக்கு இழுப்பதன் மூலம் - சர்வதேச சமூகத்துக்கு, புலிகள் ஒரு பயங்கரவாதிகள் எனக் காட்டும் கபடநாடகம் ஒன்றை மேற்கொண்டு வருகின்றது.

நாம் பலமாக இருந்தால் எப்போதும் எம்மை யுத்தத்திற்கு இழுக்கமுடியாது. பலம் இல்லாத போது எமக்கு எதிரானவர்கள் எம்மை யுத்தத்திற்கு இழுக்கத் தூண்டுவார்கள். இன்றைய சமாதானம் எமது இராணுவ பலம் ஒன்றின் மூலமாகவே நிலவுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (தீ)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்



பெயர் : யோ.நிரோஜா
முகவரி : கரவெட்டி

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்


## நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு தொலைபேசி இணைப்பு வழங்காமையால் வைத்திய சேவைகளுக்கு நெருக்கடி

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு இதுவரை காலமும் தொலைபேசி இணைப்பு வழங்காமையால் பெரும் நெருக்கடி நிலைமைகளை எதிர்கொள்வதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலதிக சிகிச்சைக்காக நெடுந்தீவு வைத்தியசாலையில் இருந்து நோயாளர்களை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பவேண்டிய சூழ்நிலை ஏற்படும்போது இவர்களை ஏற்றிச் செல்வதற்காக ஊர்காவற்துறை வைத்தியசாலையில் உள்ள அம்புலன்ஸ் வண்டியை குறிகட்டுவான் துறைமுகத்துக்கு அழைப்பதற்கான தகவல்கள் நெடுந்தீவு பொலிஸார் ஊடாகவே அனுப்பப்பட்டு வருகின்றன.

சிலவேளைகளில், நோயாளர்கள் குறிகட்டுவான் துறைமுகப் பகுதியில் அம்புலன்ஸ் வண்டிக்காக காத்திருந்துவிட்டு சாதாரண சேவையில் ஈடுபடும் பஸ், மினிபஸ்களிலேயே வைத்தியசாலைக்குச் செல்லும் நிலைமை அடிக்கடி ஏற்படுகிறது.

வைத்தியசாலையில் ஒரு தொலைபேசி இணைப்பு இருக்குமாயின் நேரடியாக தொடர்புகொண்டு நோயாளியின் நிலமையைத் தெளிவுபடுத்தி உடனடியாக அழைக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் இருப்பதுடன் மாற்று வழிகளையும் மேற்கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் இதன் மூலம் கிடைக்கும் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(113)

## முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நிறைவு விழா

தேசிய எழுச்சிப் பேரவையின் வலிகாமம் கிழக்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நிறைவும், கண்காட்சியும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் நேற்றுமுன்தினம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டப்த்தில், வலிகாமம் கிழக்கு தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சிவகடாட்சரம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். வலய முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் ப.யோகராசா பொதுச்சுடரினை ஏற்றினார். வலிகாமம் கிழக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் யாழவன் தேசியக் கொடியினை ஏற்றினார்.

இதனைத் தொடர்ந்து முன்பள்ளி ஆசிரியர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட கண்காட்சியை பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள் பார்வையிட்டனர்.

இங்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட துணை அரசியற் துறைப் பொறுப்பாளர் செம்மணனும், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கிழக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் யாழவன், மாணவர் பேரவையைச் சேர்ந்த கிரி, யாழ். வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ப.யோகராசா, யாழ் வலய முன் பள்ளி ஆசிரியத் தலைவர் சிவராஜா, தேசிய எழுச்சிப் பேரவை ஊடகப் பேச்சாளர் கனகலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு பயிற்சிபெற்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்மை குறிப்பிடத்தக்கது.

## உடுவில் கமநல நிலையத்தில் சிரமதானப்பணி

சூழல் விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 9 மணிமுதல் உடுவில் கமநல சேவை நிலைய வளாகம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது.

இந்தச் சிரமதானப் பணியில் அனைத்து விவசாய சம்மேளனப் பிரதிநிதிகளையும், பங்குபற்றுமாறு பெரும்பாக உத்தியோகத்தர் எஸ். சோதிநாதன் அழைப்பு விடுத்துள்ளார்.

## ஆயுட் கைதிகளின் தண்டனை குறித்து மீள் பரிசீலனை செய்யக் குழு நியமனம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறையிலுள்ள ஆயுட்கைதிகளின் தண்டனை குறித்து மீள்பரிசீலனை செய்ய குழுவொன்று அமைக்கப்படவுள்ளதாக நீதி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்தமாதம் 7 ஆம் திகதி முதல் நான்கு நாட்களாக வெலிக்கடைச் சிறையில் உள்ள ஆயுட் கைதிகள் தமது தண்டனைகள் குறைக்கப்படவேண்டும் எனத் தெரிவித்து உண்ணாவிரதமிருந்தனர்.

இது தொடர்பாக விசாரணைகளை நடத்த கடந்தமாதம் ஓர் விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. அந்தக்குழுவில் அறிக்கை நேற்று முன்தினம் நீதி அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

அந்த அறிக்கையின் பிரகாரம் வெலிக்கடையில் உள்ள ஆயுட் கைதிகள் தண்டனை குறித்து மீள் பரிசீலனையை மேற்கொள்வதற்காக ஒரு குழுவொன்று நியமிக்கப்படல் வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் பிரகாரம் விசேடகுழுவொன்று நியமிக்கப்பட்டு வெலிக்கடைச் சிறையிலுள்ள ஆயுள் தண்டனைக் கைதிகள் தொடர்பாக ஆராயப்பட்டு அவர்களின் தண்டனைகள் பரிசீலனைக் குட்படுத்தப்படவுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.





நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்ற மிதிவெடி அபாயக் கல்வி வார நிகழ்வில் - நிகழ்வின் தலைவர் சிவனேசன் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# இலங்கையின் வரலாற்றை மீண்டும் எழுதவேண்டும்!

## சிங்களப் பேராசிரியர் கருத்து

(வவுனியா)

இலங்கை வரலாற்றை மீண்டும் ஒருமுறை எழுதவேண்டும். அதன் மூலமே சமகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் என்று இலங்கைப் பேராசிரியரான சுசரித் ஹம்லத் தெரிவித்தார்.

சிங்கள மொழியின் வளர்ச்சி தமிழ் மொழியில் இருந்தே தோற்றம் பெற்றதென சிங்களப் பேராசிரியர் சுசரித் ஹம்லத் தெரிவித்தார். நேற்றுமுன்தினம் வவுனியாவில் நடைபெற்ற தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான சிங்கள நூல்கள் இரண்டின் வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு மதிப்பீட்டுரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இலங்கையின் இதிகாசத்தை மீண்டும் ஒருமுறை எழுதவேண்டும். அப்போதுதான் சமகாலப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்.

இலங்கை வரலாற்றில் பின் நோக்கிப் பார்த்தால் மகாவம்சம், தீபவம்சம போன்ற நூல்களில் குழறுபடிகள் [illegible] அவதானிக்கலாம். இந்த நூல்களில் வரலாற்றுச் சம்பவங்கள் திரிவுபடுத்தப்பட்டுள்ளன. இந்த நூல்களில் தமிழர்கள் சிங்களவர்களின் குரோதம் திட்டமிட்டுச் சேர்க்கப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சான்றுகள் பெறப்படும்போது அதன் முடிவுகள் சிங்களத்திலேயே வெளிவருகின்றன. இதனால் உண்மைநிலையை தமிழர்கள், சிங்களவர்கள் அறிந்து கொள்ளமுடியாதநிலை காணப்படுகின்றது.

சிங்கள மொழியின் வளர்ச்சி தமிழ்மொழியில் இருந்தே தோற்றம் பெற்றுள்ளது. சிங்கள மொழியின் வளர்ச்சியில் தமிழர்கள் கூடியபங்கை வகித்துள்ளார்கள்.

அதன் பின்னர் வந்த அரசியல்வாதிகள் தமக்குச் சாதகமாக வரலாற்றில் திரிபுபடுத்தல்களை மேற்கொண்டனர். இதன் காரணமாகவே தமிழ் இளைஞர்கள் ஆயுத மேந்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இப்போதைய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாயின் - தமிழர்



பகுதிகளில் மக்கள் மத்தியில் விருப்பு வாக்கெடுப்பை மேற்கொள்ள வேண்டும். மக்களின் தீர்ப்புக்கு மதிப்பளித்து சிங்கள மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமிழ் மக்களுக்கு உரிய தீர்வினை வழங்க வேண்டும்.


உண்மையான சமாதானம வேண்டுமானால் சந்திரிகா, ஜே.வி.பியுடன் கூட்டுச்சேரக் கூடாது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

(03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புதிய (பழைய) இயந்திரம்



புதிது புதிதாக ஜப்பானுக்கு நிகராகத் தயாரிக்கின்ற இயந்திரங்கள் சீனாவில் காணப்படுகின்றன. ஒரு சிக்கலான முறையில் ஏறக்குறைய 2550 ஆண்டுகள் பழமைவாய்ந்த ஒரு இயந்திரம் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இயந்திரங்களை ஒன்றாகச் சேர்த்து ஒரு புதுவிதமான இயக்கத்தினை உருவாக்கக்கூடிய இயந்திரமாக இது இருக்கின்றது.

எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட இந்த வகையான இயந்திரங்களினுடைய செயற்பாடுகளைப் பார்த்து இப்போதைய விஞ்ஞானிகள் மற்றும் பொறியியலாளர்கள் பிரமித்துப்போயிருக்கிறார்கள்.


இந்த இயந்திரத்தினுடைய சுழற்சி இயக்கம் சற்றுக்குழப்பாகமாகத் தான் இருக்கின்றது என்று தொழில்நுட்ப வியலாளர்கள் கூறுகின்றார்கள்.

இதனுடைய இயக்கம் வட்ட இயக்கமா? அல்லது சுழற்சி இயக்கமா? என்று சொல்லமுடியாது குழப்புகிறார்கள்.

ஆனால், இது மில்களிலும் மற்றும் நெல்லினைத் தூற்றுவதற்கும் பயன்படுத்தமுடியும் எனக்கூறுகிறார்கள். இருந்தபோதிலும் இதனுடைய இயக்கத்தை எப்படி, எந்த முறையில் இயந்திரங்களில் பயன்படுத்தலாம் என்று தற்போது சீனாவில் ஆராயப்பட்டு வருகிறார்கள் வல்லுனர்கள்.

# பக்க விளைவுகளை தரும் நீரிழிவு நோய்

கொலஸ்ரோல் குறைந்த மருத்துகள் வாதநோயையும் மற்றும் நீரிழிவு நோயையும் கொண்டுவரக்கூடியவை என்று கண்டறியப்பட்டுள்ளது. 2000 இற்கும் மேற்பட்ட நோயாளிகளை எடுத்து, லண்டன் பல்கலைக்கழகம் இந்த முடிவுக்கு வந்துள்ளது. விஞ்ஞானிகளுடைய ஆராய்ச்சிகளின்படி, இரண்டு வகையான நீரிழிவு நோய்கள் காணப்படுகின்றன. ஒன்று இதயத்தைத் தாக்கக்கூடிய நீரிழிவுநோய் மற்றையது சாதாரண நீரிழிவு நோய்.



உலகளாவிய ரீதியில் கூடுதலான மக்கள் நீரிழிவு நோய்க்கு மருந்து பாவிப்பவர்களாகத் தான் இருக்கிறார்கள். அவர்கள் பாவிக்கின்ற மருந்துகள் நீரிழிவு நோயை உடனடியாகக் குணப்படுத்தினாலும், சில பகக விளைவுகளை உண்டு பண்ணுகின்றன. குறிப்பாகப் பக்கவாத நோயை இவை உருவாக்கக் கூடியதாகவுள்ளது.

அத்துடன், இந்த குளிசைகளினால் இதயநோய்களும் ஏற்பட வாய்ப்பாகின்றது. வருடாந்தம் ஏறக்குறை 1.1 மில்லியன் நோயாளிகள் நீரிழிவு நோய்க்காக வைத்தியசாலைகளில் செலவழிக்கிறார்கள். உண்மையில் நீரிழிவு நோயாளிகள் மருந்து வில்லைகளை உட்கொள்வதைவிட, ஆயுர்வேத சிகிச்சைமுறைகளைப் பின்பற்றுவது சிறந்தது.

# புதிய உடல் வெப்பநிலை கருவி

மனிதர்களுடைய சொந்த வெப்பநிலை மாற்றங்களினை அறிந்துகொள்வதற்காக ஒரு சிறிய பற்றரி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. சடுதியாக வெப்பநிலை குறைந்தளவு காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில், இந்தவகையான பற்றரிகள் மிகவும் பயனுடையனவாகக் காணப்படுகின்றன.




இப்படியான வெப்பநிலையைக் கட்டுப்படுத்தக்கூடிய பற்றரிகளை உற்பத்தி செய்ய, 30 வருடங்கள் எடுத்திருக்கின்றன. இதிலே ஒருவகையான கொள்ளளவி காணப்படுகின்றது. இது குளிரான காலநிலைகளில் உடலைச் சூடாக வைத்திருக்கவல்லது.

அண்மையில் கொண்டு வரப்பட்ட நனோ தொழில்நுட்பம்மூலம், தோலின் கீழே பொருத்தப்பட்டால் உடலினுடைய வெப்பத்தினை குளிரான காலநிலையிலும் சூடாகப் பேணக்கூடியது.

இது தோலின் மேலே இருக்கின்ற வெப்பநிலையைக் காட்டிலும், 50 செல்சியஸினை வித்தியாசப்படுத்திக் காட்டக்கூடியது. ஏறக்குறைய ஐரோப்பாவில் 26 ஆயிரம் மக்கள் ஐரோப்பாவில் இந்த வகையான பற்றரிகளைப் பொருத்தியிருக்கிறார்கள். இதன்மூலம், இதயத் துடிப்புக்கூட ஒரு சீரான விகிதத்தில் பேணக்கூடியதாக இருக்கும் என ஏனைய வைத்தியர்கள் கருதுகிறார்கள்.

இது உண்மையிலேயே மருத்துவமனைக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

# அருத்தடுத்து வரும் நாசகாரிக் கப்பல்




அமெரிக்க நாட்டில் விமானப்படை தன்னுடைய முதலாவது ஸ்டெல்த் விமானத்தினை அதாவது யு-2 வேவுவிமானத்தினை கண்டறிந்துள்ளது. இது முதன்முதலில் 1954 ஆம் ஆண்டு கண்டறியப்பட்டது. பழைய காலத்தில் பாவிக்கப்பட்ட விமானங்கள், கப்பல்கள் ஆகியவற்றைக் கண்டறிந்து அதன் மூலம், புதியவகையான விமானங்கள் மற்றும் கப்பல்களை உற்பத்திசெய்யும் செயற்பாடுகளில் அமெரிக்க மற்றும் சுவிஸ் கடற்படையினர் கூட்டாக ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள். தற்போது அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டுக் கொண்டுவருகின்ற டிடிஎக்ஸ் நாசகாரிக் கப்பல் 2011 ஆம் ஆண்டு உலகை வலம்வரும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது 208 மீற்றர் நீளமானது. 200 மாலுமிகளை தன்னகத்தே கொண்டது. இதிலே சோனர் மற்றும் இன்பரா ரெட் ஏவுகணைகள் காணப்படுகின்றன. இதனுடைய விலை 2.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள்.



வேகம் 30 நொட்ஸ்கள் ஆகும். அடுத்ததாக விஸ்பி கோர்வெற் என்ற நாசகாரிக் கப்பல் றோயல் கடற்படையினரால் உருவாக்கப்பட்டிருக்கின்றது. சுவிஸ் கடற்படையினரால் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதனுடைய வேகம் 35 நொட்ஸ் ஆகும். இதனுடைய நீளம் 73 மீற்றர் ஆகும். இதனுடைய விலை 184 மில்லியன் அமெரிக்கடொலர்கள் ஆகும். அடுத்ததாக 152 மீற்றர் நீளமானதும், 500 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதிகொண்டதும், 27 நொட்ஸ் வேகம் கொண்டதுமான 42 நாசகாரிகப்பல்கூட தன்னுடைய முதல் பவனியை 2005 ஆம் ஆண்டில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எது எப்படியிருப்பினும், நாசகாரிக் கப்பல்கள் அடுத்தடுத்துவர இருப்பது உலக சமாதானத்துக்கு ஆப்புத்தான்.

# பறக்கும் கார்



மோட்டார் - கார் பந்தயங்களில் ஈடுபடும் கார்களுக்குரிய எரிபொருட்கள் சாதாரண எரிபொருட்களிலும் பார்க்க சக்தி கூடுதலாகத் தேவைப்படுகின்றன.

கூடுதலாக இந்த வகையான பந்தயங்களுக்குப் பாவிக்கப்படுகின்ற கார்கள்- டீசல், எரிபொருள் மூலம் இயங்கக் கூடியவாறு வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், இந்த வகையான கார்களுக்கு டீசல் கொடுக்கின்ற சக்தி போதுமானதாகவில்லை எனக் கார் பந்தய வீரர்கள் கருதுகின்றார்கள்.

தற்போது உலகளாவிய ரீதியில் பாவனைக்கு வந்திருக்கின்ற எல்பிஜி வாயு அதிக சக்திவாய்ந்ததாகவும், சிக்கனமானதாகவும் இருக்கின்றன. ஆனால், இதனைப் பந்தயக் கார்களுக்குப் பொருத்துவது மிகவும் ஆபத்தானது.

ஏனெனில், ஒரு கார்விபத்து ஏற்படும்போது, இது வெடித்துச் சிதறக்கூடியது.

ஆனால், இதனை மிகவும் பாதுகாப்பாகச் செய்து முடிப்பதற்கு 140,000 ஸ்ரேலிங் பவுண்கள்வரை செலவாகும் எனக் கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால், இது தனியார் துறை மோட்டர் கம்பனிகளால் இயலாத காரியம். ஆகவே, அரசதுறை மோட்டார் கம்பனிகள் எல்பிஜி இஞ்சின்களைக் கார்களுக்குப் பொருத்தும் திட்டத்துக்கு உதவ வேண்டும் எனக் கூறப்படுகின்றது. இப்படியான திட்டங்கள் வெற்றிபெற்றால், மோட்டார் கார்ப் பந்தயத்தின் கார்கள் ஓடாது பறக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரை விமர்சனம்

### ஜோர்



சிபிராஜின் முதற்படமான "ஸ்டுடன்ஸ் நம்பர்1" படத்தை இயக்கிய செல்வாதான் இந்த "ஜோர்" படத்தின் இயக்குநர். ஆனால், ஒருபாதுகாப்புக்கு சத்தியராஜையும் களத்தில் இறக்கியிருக்கின்றார். உண்மையில் சத்தியராஜின் மகன்தான் சிபிராஜ். படத்திலும் சிபிராஜ் உடைய தந்தை சத்தயராஜ்தான். சிபிராஜ் மற்றும் விலலன் கோட்டா சீனிவாசராவின் மகன் ரமணாவும் ஒரே கல்லூரியில் படிக்கின்றார்கள். அடாவடித்தனம் பண்ணும் ரமணாவுடன் சிபிராஜ் மோதுகின்றார். இதற்கிடையில் ரமணாவின் தங்கை கஜாலாவுக்கு சிபிராஜின்மேல் காதல் ஏற்படுகின்றது. பெற்றோரை உதறிவிட்டு, கஜாலா சிபி ராஜின் வீட்டுக்கு வருகின்றார். ஆனால், இவரை மருமகளாக ஏற்க சத்தியராஜ் மறுக்கின்றார். இதனால் சிபிராஜ் வீட்டைவிட்டு வெளியேறுகின்றார். பின்பு எப்படி எல்லோரும் ஒன்று சேருகின்றார்கள் என்பது மீதிக்கதை.



வழக்கமாகச் சத்தியராஜ் பண்ணும் லொள்ளுகளை மகன் சிபிராஜ் செய்திருக்கின்றார். அப்பாவும் மகனும் நண்பர்கள்போல பழகுவது படத்துக்கு நல்ல சுருதி சேர்க்கின்றது. வடிவேலுவின் நகைச்சுவை நல்ல கலகலப்பு. இடைவேளை வரை பானுப்பிரியாவும் இவர்களுடன் சேர்நது படத்துக்கு நகைச்சுவை மெருகூட்டுகின்றார்.

திரைக்கதையில் இடைவேளைக்குப் பிறகு ஒரு தொய்வு தெரிகின்றது. நடனம், சண்டை, நடிபபு எல்லாவற்றிலும் சிபி முதல் இடம வாங்கியிருக்கின்றார். வில்லன்கள் கோடா சீனிவாசராவ் மற்றும் ரமணா ஆகியோர் தூள்பரத்தியிருக்கின்றார்கள். தேவா இசையில் பாடல்கள் பழையவாசனையுடன் பாடுகின்றனர். யு.கே.செந்தில்குமாரின் ஒலிப்பதிவு பரவாயில்லை.

"ஜோர்" ஜோராக இருக்கும்.

ஜெயா

## ரிக்கோ நாய்

ஜேர்மனியில் காணப்படுகின்ற ஹெலரி வகையான நாய்கள் மிகவும் அறிவு மிக்கதாகும். அத்துடன், சிறப்பான வளர்ச்சியைக் கொண்டதாகவும் இருக்கின்றன. இவற்றில் ரிக்கோ என்ற நாய் ஏறக்குறைய 200 சொற்களை விளங்கிக் கொள்ளக்கூடியவாறு காணப்படுகின்றது. இது நன்கு சொற்களைப் பாடமாக்கின்றது என்பதனை விஞ்ஞானிகள் தங்களுடைய ஆய்வுகளின்படி தெரிவிக்கின்றார்கள். இந்த நாய் மனிதர்களுடைய மொழியினைக்கூட விளங்கிக் கொள்ளக்கூடியது.




அத்துடன், ஒரேவகையரன விளையாட்டுப் பொருட்களை ரிக்கோ மற்றும் மற்றைய நாய்களிடம் கொடுக்கின்றபொழுது, ரிக்கோ நாய்கள் மிகவும் அறிவுபூர்வமாக எந்த விளையாட்டுப் பொருட்களைக் கையாளுவதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இந்த நாய்க்கு மோப்பசக்திகூட அதிகம் எனக்கூறப்படுகின்றது. ஏறத்தாழ 200 வித்தியாசமான வாசனைகளை இந்த நாய் மணந்து நுகரக்கூடியது.

இந்த ரிக்கோ நாயின் செயற்பாடு ஒரு 3 வயதுப்பிள்ளையிள் செயற்பாடுகளை ஒத்ததாக இருக்கின்றது என விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

## மூளையும் தெறிவினையும்

மூளையில் காணப்படுகின்ற தெறிவினையைக் காட்டுகின்ற செயற்பாடுகளை லண்டனிலுள்ள பல்கலைக்கழகத்தினர் ஆராயந்து கொண்டிருக்கிறார்கள்.



ஆனால், மூளைக்கு ஓர் அதிர்ச்சி ஏற்படும் பொழுது, இந்தச் செயற்பாட்டில் வேகமும், திறனும் பாதிக்கப்படுகின்றது. இதற்கு மின்சார அதிர்ச்சிச் சிகிச்சையை நல்ல உதாரணமாகக் கொள்ளலாம். மின்சார அதிர்ச்சி கொடுத்து, சிகிச்சையளிக்கப்படுகின்றபொழுது, அந்த நோயாளியினுடைய தெறிவினை மிகவும் குறைவாக இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

மூளையில் காணப்படுகின்ற முன்னாண் மற்றும் நீள்வளைய மையவிழையம் ஆகிய இந்த தெறிவினையின் செயற்பாட்டுக்கு மிகவும் முக்கியமானவை.

அதிர்ச்சி வைத்தியம் காரணமாக மூளையில் இந்தப் பகுதி பாதிப்படைந்து, தெறிவினைச் செயற்பாடுகளைப் பாதிக்கின்றன. கணினிமூலம் பார்த்தபோது - மூளையில் 100 மில்லியன் நரம்புக் கலங்கள் காணப்படுகின்றன.

மிகவும் சிக்கலான முறையில் காணப்படுகின்ற இந்த கல அமைப்பினை ஆராய்வதற்காக ஒரு புதியவகைக் கணினி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


இந்த மூளையின் வளர்ச்சி மற்றும் நரம்புக்கலங்களின் செயற்பாடுகள் ஆகியவற்றை நன்கு துல்லியமாகக் காட்டப்பட்டவாறு அமைக்கப்பட்டுள்ளது.

## இராட்சத பண்டாக்கள்



அழிந்து வருகின்ற பண்டாக்கள் தற்போது சீனாக்களில் அதிகமாகக் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. இதிலும் இராட்சத பண்டாக்கள் சீனநாட்டில் காணப்படுகின்றன. சீன அரசாங்கங்கள் இந்தப் பண்டாக்களினது கண்டுபிடிப்புக்களுக்கு அனுமதியளித்து இருக்கிறது. கிட்டத்தட்ட 1600 பண்டா இனங்கள் காட்டினை விட்டு வெளியேறியிருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். 15 ஆண்டுகளின் முன்பு காணப்பட்ட பண்டா இனங்கள் தற்போது காணாமல் போயிருக்கின்றன. சீனாவின் மேற்குப்புறத்தில் காணப்படுகின்ற காடுகளிலேயே இந்த வகையான பண்டாக்கள் காணப்பட்டன. அதற்குக் காரணம் - அவை மூங்கில் காடுகளாகும். முதன்முதலில் ஏறக்குறைய 1000 பண்டாக்கள் இந்தக் காட்டினைவிட்டு வெளியேறியிருக்கின்றன. 1970 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, இப்போதுதான் மிகப்பெரிய வெற்றி கிடைத்திருப்பதாகச் சீனாவின் மிருகங்களின் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். தற்போது சீனாவில் 40 இடங்கள் அதிகம் பண்டாக்கள் வாழும் இடங்களாகக் காணப்படுகின்றன. 95 வீதமான பண்டாக்கள் தற்போது சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஆனால், 13 மற்றும் 20 வருடங்களின் முன்பு இருந்த பண்டாக்கள் தற்போது இல்லை என்றே கூறப்படுகிறது.

## மொபைல் தேர்தல் பிரசாரம்




தெருத் தெருவாகப் போஸ்டர் ஒட்டி மற்றும் விளம்பரங்கள் செய்து கூட்டங்கள் போட்டுச் செய்யப்படும் தேர்தல் பிரசாரங்களின் பாணி மாறி தற்போது இத்தாலி நாட்டில் நடைபெற இருக்கின்ற பிரதமர் தேர்தலுக்காக மொபைல் போன்களில் தேர்தல் பிரசாரம் செய்யக்கூடிய வசதி காணப்படுகின்றது. இது இத்தாலி நாட்டில் வெற்றிகரமாகச் செய்து முடிக்கப்பட்டால், அடுத்து ஐரோப்பிய நாடுகளின் நாடாளுமன்றத் தேர்தல்களிலும் இந்தப் பிரசார முறையைப் பாவிக்கலாம் என்று கருதப்படுகின்றது. ஆனால், எல்லாக் கையடக்கத் தொலைபேசிகளிலும் இந்த முறை காணப்படாது. தற்போது இத்தாலியில் இந்தப் பிரசார தகவல் பரிமாற்ற முறையினை இரண்டு அல்லது மூன்று மொபைல் கம்பனிகளுக்கு வழங்கலாம் என, இத்தாலிப் பிரதமர் அலுவலகம் தீர்மானித்திருக்கிறது. இதற்கு ஏறக்குறைய 1.9 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்கள் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கையடக்கத் தொலைபேசிகளின்மூலம் வேட்பாளர்கள் மற்றும் தங்கள் நண்பர்கள், உறவினர்கள் மற்றும் வேண்டியவர்கள் எல்லோருக்கும் எஸ்எம்எஸ் மூலம் தேர்தல் பிரசாரம் செய்யக்கூடியதாக இருக்கும். உண்மையில் இது செலவு குறைந்தது. ஆனால், வெற்றியளிக்கக்கூடிய முறையாகும்.

## கமரா போனுக்குத் தடை



கையடக்கத் தொலைபேசிகளில் கமரா வந்ததும்தான் - வந்தது அதனால் பல பிரச்சினைகள் தோன்றியிருக்கின்றன.

ஆரம்பத்தில் சாதாரணப் பிரச்சினைகளாகத்தான் இருந்தது. ஆனால், இப்போது நாட்டின் பாதுகாப்புக்கே இந்தக் கமரா போன்கள் சவாலாக இருக்கின்றன.

இந்தக் கமராக்கள் நன்கு குவியப்படுத்தக்கூடியவை. பின்பு சிறைப் பண்ணக்கூடிய வசதியும் இருப்பதானால், இதனை ஆயுதங்கள் போல பாவிக்கக்கூடிய வசதி வருமோ என ஒவ்வொரு நாடுகளின் பாதுகாப்புத்துறையும் அஞ்சுகின்றது.



இந்தப்படங்களை வேறு போன்களுக்கு அனுப்பக்கூடிய வசதியும் இருப்பதால், இது பலதரப்பட்ட சிக்கல்களைக் கொண்டு வரும் எனக் கூறப்படுகின்றது. அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் கமரா போன்களைத் தடைசெய்யக்கூடிய வகையில் சட்டங்களை இயற்றும் என எதிர்பார்க்கப்படுகின்றன. ஆனால், 2002 ஆம் ஆண்டிலிருந்து 84 மில்லியன் டிஜிட்டல் கமராக்கள்விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன.

மக்கள் இந்த வகையான கமராப் போன்களைத்தான் அதிகம் விரும்புகின்றார்கள். சில பாடசாலைகள் கமராப் போன்களைத் தடை செய்திருக்கின்றன. கூடுதலாக சவுதி மற்றும் மத்தியகிழக்கு நாடுகள் கமராபோன்களைத் தடைசெய்திருக்கின்றன. ஆனால், சத்தமில்லாமல் டிரோ 600 என்ற அற்புதமான கமரா போன் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கின்றது.

இது கிட்டத்தட்ட 2007 ஆம் ஆண்டு சந்தைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிதிவெடி அபாயக் கல்வி

- க. சுபேதிகா

# மிதிவெடிகளிலிருந்து நாம் பாதுகாப்பு தேடிக் கொள்வோம்

**வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனம் யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களுக் கிடையே 2003இல் நடாத்திய மிதிவெடி இடர் அபாயக் கல்வி கட்டுரை போட்டியில் பரிசு பெற்ற கட்டுரை.**

21 ஆம் நூற்றாண்டில் மனிதன் அறிவாற்றலிலும், புதிய கண்டுபிடிப்புக களாலும் முன்னேற்றமடைந்து கொண் டிருக்கும் அதேவேளை, புதிய கண்டு பிடிப்புக்கள் சில அவனை அழிவுப் பாதைக்கும் இட்டுச் சென்றுள்ளன. அந்த வகையில் மிதிவெடி மற்றும் வெடி பொருட்கள் என்பவற்றினால் ஏற்படும் ஆபத்துக்களும் "தொடர் கதை யாக" நீண்டு செல்கின்றது. இப்பிரச் சினை இலங்கையில் மாத்திரமின்றி சர்வதேச சமூகமும் முகங்கொடுக் கும் முக்கிய பிரச்சினையாக காணப்படு கிறது. மிதிவெடியினால் ஏற்படும் பாதிப்புக்கள் "நாளொரு வண்ண மும் பொழுதொரு மேனியுமாக" அதி கரித்துக் கொண்டே செல்கின்றது. ஆகவே, நாம் மிதிவெடி பற்றிய பூரண அறிவைப் பெற்று எம்மையும் எமது சமுதாயத்தையும் பாதுகாக்க வேண்டி யது தலையாய கடனாகும்.

மிதிவெடி என்கின்ற போது முழுமை யாகவோ அல்லது பகுதியாகவோ நிலத்தில் புதைக்கப்பட்டு மிதிக்கும் போது வெடிக்கும் வெடி பொருட்களா கும். இம் மிதிவெடியினை முதன் முதலில் தயாரித்த நாடு இங்கி லாந்து என்றும், தற்போது சீனா கூடிய தயாரிப்பை மேற்கொண்டு வருகின்றதெனவும், மிதிவெடியில் எழுபத்திரண்டு வகைகள் உண்டு எனவும், அவற்றுள் ஜொனி மிதி வெடி, தாங்கி எதிர்ப்பு மிதிவெடி, தனிநபர் மிதிவெடி, பாகிஸ்தான் $P_4$ என்பவை அடங்குகின்றதெனவும், கூறப்படுகின்றது. மிதிவெடிகளானவை பச்சை, மஞ்சள், சிவப்பு, மண்ணிறம் போன்ற நிறங்களில் காணப்படும் எனவும் இவை உலோகம், மரம் றப்பர், பிளாஸ்ரிக் போன்ற மூலப் பொருட்களினால் உருவாக்கப்பட் டுள்ளது எனவும், இவை ஆறு கிலோகிராம் அமுக்கம் பாவித்தால் வெடிக்கும் எனவும் கண்டறியப்பட் டுள்ளது.

மிதிவெடியானது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் உற் பத்தி செய்யப்பட்டாலும், ஆசியா, ஆபிரிக்கா போன்ற வறிய நாடுகளி லேயே அதிகளவில் பயன்படுத்தப் படுகின்றது. ஐக்கிய நாடுகள் சபை யின் கணிப்பின்படி உலகில் அறு பத்து நான்கு நாடுகளில் பதினொரு கோடி மிதிவெடிகள் புதைக்கப் பட்டுள்ளது எனவும், பத்துக் கோடி மில்லியன் மிதிவெடிகள் புதைப்ப தற்கு தயாராக களஞ்சியப்படுத்தப் பட்டுள்ளன எனவும், சீனா, தென் கொரியா, பிரித்தானியா, பாகிஸ்தான், இந்தியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் மிதிவெடிகளைத் தயாரிக்கின்றது எனவும், கம்போடியாவில் அதிகள வான மிதிவெடிகள் காணப்படுகின் றது எனவும் கூறப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சிறுவர் பாது காப்பு நிதியமானது, 1994 ஆம் ஆண்டு சர்வதேச மட்டத்தில் ஒரு கருத்தரங் கைக் கூட்டி மிதிவெடி உற்பத்தி, பாவனை என்பவற்றை முற்றாக தடை செய்யுமாறு உத்தரவு பிறப்பித்திருந் தது. இதன் பயனாக மிதிவெடி தயா ரிப்பில் முன்னணி வகிக்கும் பிரித் தானியா 1997 ஆம் ஆண்டு மே மாதம் தன்னிடமுள்ள மிதிவெடிகளை இன் னும் எட்டு வருடங்களில் ஒழித்து விடுவதாக கூறியிருந்தது.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் கருத்தின்படி, மிதிவெடிகளால் ஒரு மாத்தில் எட்டு தொடக்கம் பத்து வரையானவர்கள் காயப்படுகின்றார்கள் எனவும், வருடம் ஒன்றுக்குப் பத்துப் பேர் கொல்லப்படுகின்றார்கள் எனவும், கூறப்படுகின்றது. இதில் இருபத்தைந்து வீதமானோர் சிறுவர்கள் எனவும். எழு பது வீதமானோர் இருபது தொடக் கம் அறுபது வயதிற்கு உட்பட்ட வர்களாகவும் காணப்படுகின்றனர்.

அதாவது, பள்ளிச் சிறார்கள் சந் தோஷமாக, சுதந்திரமாக வளருகின்ற வேளையிலே அந்த இளம் மொட் டுக்களின் வாழ்வானது இன்று கரு கிக் கொண்டு போகின்றது. அதற்குக காரணம் மிதிவெடியினால் ஏற்படும் ஆபத்துக்களே என்று கூறின் மிகை யாகாது. அதாவது, மிதிவெடியினால பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பாடசாலைக் குச் சென்று கல்வியைத் தொடர முடி யாத நிலை காணப்படுகின்றது. இத னால் இவர்கள் கல்வியை இடை நிறுத்தி உளத்தால் பாதிக்கப் பட்டு மனநோயாளிகளாகக் கூட காணப்படுகின்றனர். மற்றைய வாகனங்கள் பார்த்து கவலை அடைகின்றார்கள். இதனால அவர்களது குடும்பமும் கவலை அடைகின்றது.

சிறுவர்களுக்கு அடுத்த படி யாக இருபதிற்கும் அறுபது வய துக்கும் இடைப்பட்ட அதிலும் குறிப்பாக ஆண்கள் மிதிவெடி யினால் மிகவும் பாதிப்படை கின்றனர். காரணம் அவர்கள் தங்களது வாழ்வாதார தேவைகளை நிவர்த்தி செய்யும் முகமாக மிதி வெடி பிரதேசத்துக்குள் செல்வதால், அவர்கள் அதிகளவில் பாதிக்கப் பட்டு வருகின்றார்கள். இதனால் அவர்கள் மட்டுமன்றி அவரது மனைவி, பிள்ளைகள் என முழுக் குடும்பமுமே பாதிக்கப்பட்டு வருகின்றது. அத னால் அவர்களை சமூகத்திலிருந்து ஒதுக்கி விடும் நிலை காரணமாக அவர்கள் மனப்பாதிப்பிற்கு உள்ளா கிறார்கள். ஆகவே நாம் அவற்றி லிருந்து பாதுகாப்பாக நடத்தல் சிறந்ததாகும்.

மிதிவெடிகளானவை கைவிடப் பட்ட காவலரண்கள், பதுங்கு குழிகள், இராணுவ முகாம்கள். பயன் தரு மரங்களின் கீழ், வீதியோரங்கள், வீட்டு வாசல்கள், கிணற்றடிகள் எனப் பல இடங்களில் காணப்படுகின்றது. எனவே, நாம் அவ்விடத்தில் பாதுகாப்பாக நடப் பதன் ஊடாக எங்களை நாமே பாது காத்துக் கொள்ளலாம். இம் மிதி வெடிகள போர்நடந்த இராணுவம் போராளிகள் தங்கியிருந்த, இடங்களில் அதிகளவில் காணப்படுகின்றது. மிதி வெடிகள் இராணுவத்தினராலும், போராளி களாலும் தங்கள் எதிரணியினரைக் கொல்வதற்காகவும் தங்கள் பாது காப்பை வலுப்படுத்துவதற்காகவும்,



புதைக்கப்பட்டுள்ளது.

மேலும், மிதிவெடியினால் பாதிக் கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு நட வடிக்கைகள் மேற்கொள்ளுதல் அவ சியமாகின்றது. மிதிவெடியினால் ஏற்பட்ட ஆபத்துக்கள் சிலருக்கு வாழ வில் மறக்க முடியாத அனுபவமாக, அமைந்து விடுகின்றது. இதனால் அவர்களும் அவர்களது குடும்பமும் கவலைப்பட்டுக் கொண்டு இருக்கும் போது அவர்களது வாழ்க்கையே ஒரு சவாலாக மாறி விடுகின்றது. இத னால் அவர்கள் பல பிரச்சினை களை எதிர் நோக்குகின்றார்கள்.

அதாவது கல்விச் சிறார்கள் கல் வியைத் தொடர முடியாதுள்ள நிலை, போக்குவரத்துப் பிரச்சினைகள், மருத் துவ செலவுகள், சமூகத்தில் பாரபட் சம் காட்டுதல் போன்ற பல பிரச் சினைகள் காணப்படுகின்றது. அண் மைக் காலமாக யாழ்.குடாநாட்டில், ஊனமுற்றோருக்கு புனர்வாழ்வு அளிக கும் முகமாக பல சேவைகள் வழங் கப்பட்டு வருகின்றது. அதிலும் குறிப பாக மிதிவெடியினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு புனர்வாழ்வு நடவடிக் கைகள் அளிக்கப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. அதாவது உடல ரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ மற்றும் ஏனைய உதவி களையும் உளரீதியாகப் பாதிக் கப்பட்டவர்களுக்கு தேவையான ஆலோ சனைச் சேவைகளையும் பொருளா தார ரீதியாக பாதிக்கப்பட்டவர்க ளுக்கு கடன் அடிப்படையிலான நிதி வசதிகளையும் நிறுவனங்கள் வழங்கி வருகின்றன.

அந்த வகையில் உடல்ரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு, செயற்கைக் கால் பொருத்துதல், சக்கர நாற்காலி, கவையுள்ள கொம்பு போன்ற உதவி களையும் உளரீதியாக பாதிக்கப்பட் டவர்களுக்கான ஆலோசனைச் சேவை களாகவும் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிலகம், புனர்வாழ்வுக்கழ கம், குடும்ப புனர்வாழ்வு நிலையம், சர்வோதயம், சாந்திகம், சிறுவர் பாது காப்பு நிதியம், வெண்புறா நிறுவனம போன்றவை தங்கள் மகத்தான சேவையை மக்களுக்காக வழங்கி வரு கின்றது. இந்நிறுவனங்களின் சேவை என்றும் பாராட்டத்தக்கதாகும். இதே போல் ஏனைய அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும், செயற்படுமாயின் மிதிவெடியால் ஏற்படும் ஆபத்துக்களி லிருந்து பாதுகாப்புப் பெற்றுக் கொள்ள லாம்.

முடிவாக நோக்கும் இடத்து மிதி வெடியால் ஏற்படும் பாதிப்புக்களிலி ருந்து எங்களை நாங்களே பாது காக்க நாம் நடவடிக்கை எடுப்பது டன், நடவடிக்கை எடுத்து வரும் நிறு வனங்களுக்கு ஒத்துழைப்பாக செயற் படுதல் சாலச் சிறந்ததாகும். "எய்த வன் இருக்க அம்பை நோகலாமா" ஆகவே நாம் மிதிவெடியின் மீது குற்றம் சுமத்தாமல் எங்களை நாங் களே பாதுகாத்து வாழ்வோமாக.

"மிதிவெடிகள் ஒழிக
மக்கள் நலமுடன் வாழ்க"


# மிதிவெடி அபாயக் கல்வி வாரம்

## யூன் 21 தொடக்கம் யூன் 27 வரை

**மிதிவெடி, வெடிபொருட்களினால் ஏற்படும் ஆபத்தைத் தடுக்க பொதுமக்களாகிய நாம் அவதானமாக இருப்போம்.**

- நாங்கள் செல்லும் இடங்களிற்கு முன்னர் பாவித்த பாதுகாப்பான பாதைகளையே பாவிப்போம்.
- நாம் புதிய இடங்களிற்குச் செல்லும் போது அவ்விடத்தின் மிதிவெடி அபாயம் பற்றி அப்பிரதேச வாசிகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்வோம்.
- எமது பிரதேசத்திற்குள் புதிதாக வருபவர்களிற்கு எமது பிரதேசத்தின் மிதிவெடி நிலமை பற்றிய சரியான தகவல் களைக் கொடுப்போம்.
- மீளக் குடியமரும் பிரதேசமாக இருப்பின் அப்பிரதேசம் முழுமையாக மிதிவெடி இல்லாத பிரதேசமா என்பதை உறுதி செய்து மீளக் குடியமருவோம்.
- இனம் புரியாத மர்மப் பொருட்களைக் கண்டால் மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்திற்கோ அல்லது மிதிவெடி அகற்றும் நிறுவனங்களுக்கோ அறிவிப்போம்.
- மிதிவெடிகள், வெடிபொருட்கள் சம்பந்தமான அபாயப் பலகைகள் உரிய இடத்தில் உள்ளது என்பதை உறுதிப்படுத்துவோம்







**District Mine Action Office, Jaffna**

மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், யாழ்ப்பாணம்.

(சி/2677)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே*
*செல்வத்தைத் தேய்க்கும் படை.*

திருக்குறள்

# நமது நோக்கு

## உலக அகதிகள் தினம் சில எண்ணங்கள்

நேற்றைய தினம் சர்வதேச அகதிகள் நாளாக உலகமெங்கும் அனுஷ்டிக்கப்பட்டது.

அகதிகள் என்ற சொல் இன்று உலகளாவிய ரீதியில் பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கும், மனுக்குலத்தின் மேன்மைகளை புறந்தள்ளிவிட்டு மனித இருப்பை கேள்விக்குரியதாக்கி, மனித உரிமைகளை மனிதனே நிராகரித்து ஒதுக்கும் அசிங்கத்தை உலகெங்கனும் அடையாளப்படுத்தி வைத்திருக்கும் சொல்லாகும்.

எந்த நாட்டில் அகதி என்றழைக்கப்படும் மனிதன் ஒருவன்தானும் இருக்கிறானோ அந்தநாட்டில் ஜனநாயகம், சுதந்திரம் என்ற சொற்கள் அதற்கேயுரிய மனித உரிமைகளை உறுதிப்படுத்திநிற்கும் மகத்தான அர்த்தத்தை இழந்தவையாகவே இருக்கும் என்பது ஆபிரிக்க கவிஞன் ஒருவனின் வெஞ்சினவரிகளாகும்.

உலகெங்கும் மனிதன் மனிதனாகவே பிறக்கிறான். மனிதனாகவே வாழவிரும்புகின்றான், மனிதனாகவே தன்னை அடையாளப்படுத்தி உயரவிரும்புகின்றான். எனினும் உலகமெங்குமே மனிதனாக மனிதனுக்கேயான சுதந்திர ஜனநாயக உரிமைகளுடன் வாழத்துடிக்கும் மனிதன் மேலாதிக்க வெறித்தனமும், சக மனிதனை அடக்கி ஒடுக்கி தன் ஆளுமைக்குள் வைத்துக்கொள்ளத் துடிக்கும் வெறிகொண்ட இன்னொரு மனிதனால் இலக்குவைக்கப்படும் போது தான் அடிமைப்படுத்தப் படுகின்றான் அல்லது அகதியாக்கப்படுகின்றான்.

அகதியென்பவன் தன் சொந்த மண்ணில் சொந்த உறவுகளுடன் சுதந்திரமாக வாழும் வாழ்வை இழந்தவன் அல்லது இழக்கவைக்கப்பட்டவனாவான்.

அந்த வகையில் அவனுக்குத் தேசிய ரீதியாக, இனரீதியாக மத மற்றும் மொழிரீதியாக சாதி அடிப்படையில் இழைக்கப்படும் அநீதிக்கு இன்னொரு சக மனிதனே காரணமாகின்றான் என்பது தான் அவமானகரமான விடயமாகும்.

உலகம் இருபத்தோராம் நூற்றாண்டில் அறிவியல் சிகரங்களை எட்டிய நிலையில் கம்பீரம் காட்டி நிமிர்ந்து நிற்கக் காரணமான மனிதகுல சாதனைகள் இன்னமும் உலகெங்கிலுமுள்ள நாடெங்கிலும் அகதிகளாக, அநாதைகளாக ஏதிலியர் என்ற பெயரைக் காவிக் கொண்டு அவலங்களை மட்டுமே உறவாகக் கொண்டு திக்கற்ற மனிதரென திசையற்ற இடம்பெயர்ந்தும், புலம்பெயர்ந்தும் நிரந்தரப் பாதுகாப்பான இல்லிடமின்றி அலையும் மனிதகுல வேதனைகளின் முன்னே அவமானத்தால் தலைகுனிந்து நிற்பதுதான் அவமானகரமான விடயமாகும்.

சக மனிதனின் சொந்த வாழ்விட மற்றும் வாழ்வியல் உரிமைகளை அரசியலின் பேராலும் போரின் பேராலும் நிராகரிக்கப்படும் அவலம் எந்த நாட்டில் மையங்கொள்கின்றதோ அந்த நாட்டில் அகதி என்கின்ற ஓர் இனம் உருவாகும் நிலை ஏற்பட்டுவிடுகின்றது.

அகதிகள் ஒன்றும் மனித உணர்வற்ற ஜடங்களல்ல என்ற விடயம் தம்மை அறிவு ஜீவிகளாகவும், ஆதிக்க சக்திகளாகவும் எண்ணி அதிகார வலுவைப் பயன்படுத்தி தம்மிலும் பலவீனமான மாற்றுக் கொள்கைகளையுடைய மத, மற்றும் இனத்தவரை அடக்கவோ, அழிக்கவோ முனையும் மனிதகுல அநாகரிகம் அமெரிக்கா முதல் இலங்கை வரையிலான உலகின் முன்னேறிய ஜனநாயகம் பற்றி பீற்றித்திரியும் நாடுகள் முதல், மனித முன்னேற்றம் இன்னமும் முழுமையாக எட்டாத நாடுகள் வரை அனைத்திலும் இன்னமும் தொடர்வதுதான் வெட்கப்பட வேண்டிய விடயமாகும்


மனித உரிமைகளை மனிதனே பறிக்கும் அல்லது நிராகரிக்கும் எந்த நடவடிக்கைகளையும் நியாயப்படுத்த முனையும், எவரும், எந்த நாட்டவரும் மனித குலத்தின் எதிரிகளே....!

அண்மையில் படித்த ஒரு கவிதை வரிகள் நினைவுக்கு வருகின்றன. 'தமிழன்' எனத் தலைப்பிட்ட அந்தக் கவிதை சொல்லும் சேதி அழுத்தமானது.

எனது கிராமத்தில் நான் ஏழை
தாழ்த்தப்பட்டவன்,
எனது சொந்த மண்ணில்
நான் சிறுபான்மை இனத்தவன்
அடிமை...
எனது நாட்டில்
பேரினவாதத்தால் அலைக்கழிக்கப்பட்ட
அகதி...
இடம்பெயர்ந்த ஊரில்
பிச்சைக்காரன்...
புலம்பெயர்ந்த மண்ணில்
அநாதை...
ஆனால் நானும் மனிதனே....!

அகதிகள் எனத் தாங்களே அடையாளம் இட்ட மனிதர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க ஓடிவரும் உலக சமூகம் தான் அவர்கள் அகதிகளாகவும் காரணமென்பதை புரிந்து கொள்ளாத மேலாதிக்க சக்திகள் இருக்கும் வரை உலகமுள்ளவரை அகதிகள் தினம் அனுஷ்டிக்கப்படும் அவலம் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

# நாடும் நடப்பும்




# 45 வயது பூர்த்தியான பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்க அரசு தீர்மானம்

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்குதல் என்ற திட்டத்தின் கீழ் 45வயதைத் தாண்டிய பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்புக்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக, நிதியமைச்சர் சரத் அமுனுகம உறுதியளித்தார்.

இதேவேளை, எதிர்வரும் வரவுசெலவுத் திட்டத்தினூடாக அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்கவுள்ளதாகவும் அமைச்சர் உறுதியளித்தார்.

இலங்கை அரச எழுதுநர் சேவைகள் சங்கத்தினர் நிதியமைச்சரைச் சந்தித்த போதே, நிதியமைச்சர் இந்த உறுதிமொழிகளை வழங்கினார்.

அரச ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து, நீண்டநேரம் பேசிய எழுதுநர் சேவைகள் சங்கத்தினர் 45 வயதைத்தாண்டிய பட்டதாரிகள் பிரச்சினை குறித்தும் பேசினார்.

இதன் போதே பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு என்ற திட்டத்தில் 45வயதைத் தாண்டியவர்களையும் சேர்க்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

வேலையற்ற பட்டதாரிகள் அனைவருக்கும் வழங்கப்படுகின்ற நியமனங்கள் எந்த விதத்திலும் தற்காலிக மானதாகவோ அல்லது அமைய அடிப்படையிலோ அமைய மாட்டாது. அந்தந்த நிறுவனங்களில் இருக்கின்ற வெற்றி டங்களுக்காக வழங்கப்படுகின்ற நிரந்தர நியமனங்கள் என, அரசு உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார் .

## கலாசார சீரழிவுகளைத் தடுக்க விழிப்புக் குழுக்கள் அமைப்பு

விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டு இரவு வேளைக ளில் திருடர்கள் மற்றும் கலாசார சீரழிவுகளை இல் லாது ஒழிக்குமுகமான ஏற்பாடானது, திருநெல்வேலி பாற்பண்ணை, இராசவீதி உள்ளிட்ட பகுதிகளில் நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - பாற்பண்ணை அதனை அண்டிய பகுதிகளில் திருட்டு, சாராய விற்பனை மற்றும் வீதிச்சண்டைகள் ஆகிய வற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டு எட்டுப்பேரை உறுப்பினராகக்கொண்டு முறைமாற்ற அடிப்படையில் இரவுவேளைகளில் விழிப்பு நடவடிக்கைகளில் இந்தக்குழுவானது செயற்பட்டு வருகின்றது. (205)

## கமநல சேவை நிலையத்துக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ். மாவட்டத்திலுள்ள கமநலசேவை நிலையங்களுக்கு நிகொட் நிறுவனம் விவசாய உபகரணங் களை வழங்கவுள்ளது. இந்த உபகரணங்களை யாழ். கமநல சேவை திணைக்களத்திடம் நிகொட் வழங்கியுள்ளது. யாழ்.மாவட்டத்திலுள்ள சகல கமநலசேவை நிலையங்களுக்கும் பிரித்து இவை வழங்கப்படும்.

இரு சில்லு உழவு இயந்திரம் 7, நீர் இறைக்கும் இயந்திரம் 120, தெளிகருவி 100, விசைத்தெளிகருவி12, அருவிவெட்டும் இயந்திரம்12 ஆகிய உபகரணங்களே நிகொட் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது. (17)

### ஹெல உறுமயவுக்கு முன்னர்

## மதமாற்றத் தடைச்சட்டத்தை கொண்டுவரும் நிலையில் அரசு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் ஜாதிக ஹெல உறுமயவை முந்திக்கொண்டு மதமாற்றத் தடைச்சட்டத்தை கொண்டு வரும் முயற்சிகளில் அரசாங்கம் முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.

அரசாங்கத்தின் இந்த மதமாற்றத் தடைச்சட்டம் தொடர்பான பிரேரணைக்கும், ஏற்கனவே நாடாளுமன் றத்தில் ஜாதிக ஹெல உறுமயவினரால் கொண்டுவரப் படவுள்ளதாக அறிவிக்கப்பட்ட பிரேரணைக்கும் இடையில் எதுவித அடிப்படை உள்ளடக்க வித்தியாசங்களும் இல்லை.

இந்தநிலையில், பௌத்தத்தின் காவலர்கள் என்ற பெயரை எடுப்பதற்காகவே, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் இப்போது இந்தப் பிரேரணையை ஜாதிக ஹெல உறுமயவுக்கு முன்னதாகக் கொண்டு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைச்சரவை அனுமதியுடன் நாடாளுமன்றுக்கு விரைவில் கொண்டு வரப்படவுள்ள அரசாங்கத்தின் இந்த மதமாற்றத் தடைச் சட்டம், சட்டவிரோதமாக, ஒருவர் மதமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டமை உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில், அவருக்கு 5 வருட சிறைத்தண்டனையும், ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணமும் அறவிடப்படுமென்ற விதிமுறைகளையும் கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது

# ஹெல உறுமய எம்.பி மீதான தாக்குதல் குற்றச்சாட்டை மறுக்கிறார் மேர்வின் சில்வா

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை கடுமையாகத் தாக்கியமை தொடர்பாக தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அபாண்டமானவை என அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினரான மேர்வின் சில்வா தெரிவித்தார்.

ஒரு பௌத்தத் துறவியான நாடாளுமன்ற உறுப் பினரைத் தாக்கவேண்டிய அவசியம் தனக்கில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

தாக்குதலுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரான சிறி சுமங்கள தேரர், தன்மீதான இந்தக் குற்றச்சாட்டினை நிரூபிப்பாராக இருந்தால், தான் தனது நாடாளுமன்றப் பதவியினை இராஜினாமாச் செய்யத்தயாராக இருப்பதோடு மட்டுமல்லாமல், தனது உயிரை மாய்த்துக்கொள்ளவும் தயாராக இருப்பதாக மேர்வின் சில்வா தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது கேவலமான முறையில் தாக்குதல் நடாத்தப்பட் டிருப்பதை மருத்துவ அறிக்கைகள் உறுதிப்படுத்தியிருக் கின்ற அதேவேளை, தம்மீது தாக்குதல் நடாத்தியது யார் என்பது தமக்குத் தெரியும் எனவும், தாக்குதலுக்குள்ளான ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக நோக்கு.. - வரணியூர் எஸ். ஜெயா

# சிந்தனைச் சீரழிவில் இளந்தலைமுறை சமூகத்திடம் விழிப்புணர்வு வேண்டும்

இளம் சமுதாயத்தின் இன்றைய சிந்தனைச் சிதறலால் ஏற்பட்ட குழப்பகரமான சமூக அமைப்பிற்கும், அதன் சீரழிவுத் தோற்றப்பாட்டிற்கும் காரணம் யார் என, பல்பக்க விவாதமும் தேடல் முறையிலான கருத்தாடல்களும் என ஊடகங்கள் வாயிலாக ஒரு விவாதக் களமே உருவாகியுள்ளதெனலாம்.

இத்தகையதொரு போக்கு உருவாவதற்கும் வன்முறை, முரண்பாடு, ஒழுக்கச்சீர்கேடு, கலாசார துஷ்பிரயோகம் என்பன புரையோடிய ஒரு சமூகம் உருவாவதற்கும் இளந்தலை முறையினரை மாற்றங்காண வைத்தது யார்? பெற்றோரா? சமூகமா? அல்லது வேறு எதுவும் பின்னணியா? என்பதே எல்லோரினதும் இன்றைய கேள்வியாகும்.

பெற்றோர்களை எடுத்துக் கொண்டால், இவர்கள் தங்களது பிள்ளைகள் மீது அளவு கடந்த பரிவினைக் காட்டுவதனால், அவர்களின் ஆசைக்கு இவர்கள் அடிபணிந்து போகின்றனர். இதன் காரணமாக பிள்ளைகளுக்குத் தேவைக்கதிகமான பணத்தினைக் கொடுத்தல் மற்றும் தேவையற்ற ஆடம்பர வசதிகளான மோட்டார் வண்டி, கைத்தொலைபேசி என்பனவற்றினைக் கொடுப்பதனால், இதன் பயன்பாடு அவர்கள் தேவைக்கு மேலதிகமாக இருப்பதனால், இதனைப் பயன்படுத்த மாற்று வழிச் சிந்தனையினை மேற்கொள்கின்றனர். இதன் ஒரு விளைவே வன்முறை, முரண்பாடு, கலாசாரச் சீர்கேடு என்பனவற்றினைத் தூண்ட வழிவகுகின்றது.

> **மேலதிகமாக கிடைத்த மோட்டார் வண்டி மற்றும் கைத்தொலைபேசி என்பவற்றினைப் பயன்படுத்த அவர்களுக்கு ஒரு களம் தேவைப்படுகின்றது. அத்தகைய கள அமைவைக் கொடுப்பதே இன்றைய வன்முறைகளும் கலாசாரச் சீர்கேடுகளும் ஆகும்.**

அதாவது, மேலதிகமாக கிடைத்த மோட்டார் வண்டி மற்றும் கைத்தொலைபேசி என்பவற்றினைப் பயன்படுத்த அவர்களுக்கு ஒரு களம் தேவைப்படுகின்றது. அத்தகைய கள அமைவைக் கொடுப்பதே இன்றைய வன்முறைகளும் கலாசாரச் சீர்கேடுகளும் ஆகும்.

இதைவிட சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மீது திணிப்பு முறைக் கல்வியினை மேற்கொள்வதால் அதாவது, எந்த நேரமும் படி, படி எனத் திணிப்பதனால் அவர்களுக்கு ஏற்படும் விரக்தி நிலை அவர்களை வீட்டுச் சமூகத்திலிருந்து அன்னியப்பட வைக்கின்றது.

இத்தகைய அன்னியப்பாடானது புறச்சமூகம் நோக்கிய நகர்வினைத் தூண்ட அது நாளடைவில் வன்முறை, கலாசாரச் சீரழிவு எனும் பொறிக்குள் புகுத்தி விடுகின்றது.

கீழ்த்தட்டு மக்களின் அதி ஏழ்மையும், மேல் தட்டு வர்க்கத்தினரின் அடக்குமுறை அல்லது அதி ஆடம்பரவாழ்வும் இந்த இரு தட்டுக்களுக்குமிடையிலான இடை வெளித்தூண்டல், வன்முறைக்களமாக மாறிவிடுகின்றது. அதாவது, வறுமையில் உள்ளவன் தனது வயிற்றுப்பிழைப்புக்காக கலாசாரத்தினை சீரழிக்கின்றான். செல்வந்தனோ தனது செல்வமிடுக்கினால் கலாசாரத்தை சீரழிக்கின்றான். வறியவன் வறுமைக்காக வன்முறையில் ஈடுபட செல்வந்தன் செல்வச் செருக்கில் வன்முறையை கலாசாரமாக்கின்றான்.

இப்படிப்பட்ட ஒரு சமூக அமைப்பு வன்முறைக்கும் இன்றைய இளந்தலை முறையின் சிந்தனைச் சீரழிவிற்கும் காரணமாக அமைகின்றது.

மேலும், சமூகமானது தனது பார்வையினூடாகவே ஒருவனை அல்லது ஒரு குழுவினைச் சிந்தனைச் சீரழிவிற்கு உட்படுத்தி விடுகின்றது. இளம் சமூகத்தைக் கண்டால் அவர்கள் பொறுப்பற்றவர்கள் அல்லது அனுபவம் குறைந்தவர்கள் எனக் கணிப்பீடு செய்து அவர்களை மட்டுப்படுத்த நினைப்பதனால். அவ்வாறு நிராகரிக்கப்பட்ட இளம் சமூகம் ஓர் உளநிலைத் தாக்கத்திற்கு ஆட்படுகின்றது.

இதனால் அவர்கள் தமது தனிப்பட்ட அல்லது இணைந்த திறமைகளை வெளிப்படுத்த களம் இல்லாது போவதனால், தமது திறமை வெளிப்பாட்டிற்கு வன்முறைகளைக் களமாக மாற்றிவிடுகின்றனர். இவ்வாறு சீரழிக்கப்பட்ட அவர்களது சிந்தனை காலப்போக்கில் மது, மாது, போதை எனும் கலாசாரச் சீரழிவிற்கும் வித்திட்டு விடுகின்றது.

இந்த இடத்தில் இந்தக்கிழமொழி,
சிறுபிள்ளை வேளாண்மை விளையும்
வீடுவந்து சேராது, என்பது

இறந்து விட்டதாகவே கருதவேண்டும். இப்படிப்பட்ட தேவையற்ற எடுகோள்களும், முதியவர்களின் மனச்சிந்தனையும், அதாவது தாம் எப்போதும் அறிவில் மூத்தவர்கள் என்ற அகந்தையும் அகற்றப்படல் வேண்டும். அப்படி இல்லாது விட்டால் முதிய பண்டிதரிடம் படித்த ஒரு இளைஞன் வைத்தியராவது எப்படி? இளையவன் அறிவு குறைந்தவன் என்றால், முதியவருக்கு மருத்துவம் பார்ப்பது எப்படி? எனவே பழமைவாத சமூகச் சிந்தனை ஓட்டங்களும், வர்க்க முரண்பாடுகளும் இளைஞர்களின் சிந்தனைச் சீரழி விற்கு வித்திட்டு இன்றைய சமூக நிலைகளைத் தோற்றுவித் துள்ளதெனலாம்.

ஆனால், இவை மட்டும் ஓரு நியாயமான சிந்தனையாளருக்குப் போதுமான காரணமாக அமையப்போவதில்லை. இதற்குக் காரணம் இன்றைய சமூகத்தின் ஒரு சிந்தனைப் பிறழ்வும் இன்றைய இளந்தலை முறையின் சீர்கேட்டிற்கு காரணமாக அமைவதே ஆகும்.

சமூகத்தில் புரையோடிப் போயுள்ள சினிமா, மோகம் சாதிய அணுகுமுறை, குண்டர்களின் அரசியல் என்பன இவர்களின் சிந்தனைச் சீரழிவினைத் தூண்டி விடுகின்றன. இன்றைய சினிமாக்களில் (குறிப்பாக தமிழ்ப் படங்களில்) காணப்படும் ஆபாசக் காட்சிகளும், வசனங்களும், வன்முறைகளும், காதல்லீலைகளும், கீழ்த்தர நகைச்சுவை பேச்சுக்களும் எடுத்தவுடன் எதற்கும் உணர்ச்சி வசப்படும் இளந்தலைமுறையைக் கவர்ந்து விடவே அவர்களும் அவ்வாறு செயற்பட நினைத்து தமது சிந்தனைகளை சிதறடிக்கச் செய்ய முயல்கின்றனர். இதன் அறுவடையாக கலாசார சீரழிவும், வன்முறை உருவாக்கமும் கிடைக்கின்றன.

இத்தோடு சாதியவாதக் கோட்பாடுகளும் இப்படிப்பட்ட போக்கினைத் தூண்டி விடுகின்றன. சாதிக்கு ஒருகோவில் அதில் வன்முறை, சாதிக்கு ஒருதெரு அதில் வன்முறை, சாதிக்கு ஒரு தொழில் அதில் வன்முறை என தொடர்ந்து கொண்டே செல்கின்றது.

இதேபோன்றே வடக்கு கிழக்கில் சில குண்டர் குழுக்கள் தமது அரசியல் நாடகத்தினை அரங்கேற்ற, இளந்தலைமுறையினை சிந்தனைச் சலவை செய்து தமது செயற்பாட்டுக்கு பகடைக்காய் போன்று பயன்படுத்துகின்றனர். இதன் மூலம் அவர்கள் ஒரு கொலைக் கலாசாரத்தையே அரச படைகளின் ஆதரவுடன் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றனர். இவர்கள் இளந்தலை முறையை கவர கீழ்த்தர நீலப்படங்களையும், அதிகரித்த குடிபானங்களையும் சமூகத்தில் பரப்பிவிடுகின்றனர்.

இப்படிப்பட்ட பொறிகளில் வீழ்ந்த இளந்தலைமுறையினர் சிந்தனைச் சீரழிவிற்கு உட்படாது பாதுகாப்பதில் பெற்றோர், சமூகம் என்பன விழிப்படைதல் வேண்டும். அத்தோடு, இளந்தலைமுறை தம்மைத் தாம் தற்காத்து கொள்வதனூடாகவே சிறந்த தொரு சமூகத்தினை உருவாக்க முடியும்.

ஒரு படைப்பாளியின் நினைவாக... பகுதி - 8 - தி.ஞானசேகரன்

# மலையக இலக்கிய மறுமலர்ச்சியில் பங்காற்றிய எழுத்தாளர் கே.கணேஷ்

1949இல் வீரகேசரியில் துணையாசிரியராகப் பணிபுரிந்தார். அச்சமயம் கே.பி.ஹரன் ஆசிரியராகவும், கே.வி.எஸ். வாஸ் செய்தி ஆசிரியராகவும் இவருடன் பணிபுரிந்தனர். அக்காலத்தில் வெளிவந்த இலங்கை சுதந்திர மலரைத் தயாரிப்பதில் கணேஷ் முன்னின்று உழைத்தார்.

1956இல் சுதந்திரன் செய்தி ஆசிரியராகப் பணிபுரிந்தார். அப்போது எஸ்.டி.சிவநாயகம் அப்பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். எஸ்ராஜதுரை, சில்லையூர் செல்வராஜன், அ.ந.கந்தசாமி, எம.துரைசாமி ஆகியோரும் அக்காலத்தில் அவருடன் பணியாற்றினார்கள்.

## பதவிகள், கௌரவங்கள்

திரு கணேஷ் அவர்கள் தமிழ்க் கலாசார பேரவையின் நிறைவேற்று கவுன்சில் உறுபபினராக 1954 முதல் 1964 வரை பணிபுரிந்தார்.

உலகத் தமிழ்க் கலாசாரப் பேரவையின் நிறைவேற்றுக் கவுன்ஸில் உறுப்பினர்.

ஆபிரிக்க - அகிய எழுத்தாளர் சங்கத்துடன் இணைந்த இலங்கை மக்கள் எழுத்தாளர் முன்னணியின் உபதலைவர்.

1958இல் ஜப்பான் சக்கரவர்த்தியின் பிறந்த தினத்தையொட்டி அகில உலக ரீதியில் நடாத்தப்பட்ட கவிதைப போட்டியில் மேகங்கள் என்ற கவிதையை எழுதி வெற்றிபெற்று ஜப்பானிய சக்கரவர்த்தி ஹீரோஹஜட்டோவினது அரசவைக் கவிஞர்களது பாராட்டு விருதைப் பெற்றார்.

1971இல் மல்லிகை இதழ் கே.கணேஷ் அவர்களின் உருவப் படத்தை அட்டையில் பிரசுரித்து கௌரவித்தது. அதன் பின்னர் 1989 மே-ஜூன் கொழுந்து இதழிலும் அவரது உருவப்படம் இடம்பெற்றது.

ஜனதா கமிட்டியின் உறுப்பினராக 1975 முதல் 1977 வரை பணியாற்றினார்.

இலங்கை கலாசார அமைச்சின் தமிழ் இலக்கிய ஆலோசனைச் சபை - சாகித்திய மண்டல உறுப்பினராக 1975 முதல் 1977 வரை பணியாற்றினார்

ரோயல் ஏஸியாற்றிக் சொசைட்டியின் ஆயுட்கால உறுப்பினர். பென் - **PEN** ஸ்தாபனத்தின் உறுப்பினர். இது கவிஞர்கள், நாடகாசிரியர்கள், பத்திரிகையாளர்கள, நாவலா சிரியர்கள் ஆகியோரைக் கொண்ட சர்வதேச ஸ்தாபனமாகும். இதன் கிளைகள் ஐம்பது நாடுகளில் உள்ளன. இந்த ஸ்தாபனம் சிதம்பரத்திலும் சென்னையிலும் மாநாடுகள் நடத்தியபோது அதில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார்.

உக்ரேன், பல்கேரியா நாடுகளில் நடைபெற்ற உலக மொழிபெயர்ப்பாளர் மாநாடுகளில் 1984இலும் பின்னரும் இரு தடவைகள் இலங்கையின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். 1863இல் சோவியத் ஒன்றியத்தின் பல பகுதிகளையும் சுற்றிப்பார்க்கும் வாய்ப்பும் இவருக்குக் கிட்டியது.

உக்ரேனிய மகாகவி தராஸ்செவ்செங்கோ கவிதைகள், மூங்கிற் பள்ளம் ஆகிய இரு நூல்களும் சுதந்திர இலக்கிய விழாவில் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசினை இவருக்குப் பெற்றுக் கொடுத்தன.

இலங்கை கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் இவரது நீண்டகால இலக்கிய சேவையைப் பாராட்டி 1-7-94இல 'வசந்தத்தை நோக்கி' என்ற கலையிலக்கியக் கலாசார விழாவில் கௌரவித்தது. இந்துசமய கலாசார இராஜங்க அமைச்சு 1991இல் 'இலக்கியச் செம்மல்' விருது வழங்கிக் கௌரவித்தது. இலங்கை அரசினால் 1995 இல் 'கலாபூஷணம்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இலங்கையின் கலை இலக்கியத் துறைக்குப் பெருமை சேர்த்து வருவோரைக் கௌரவித்து சிறிலங்கா தேசிய நூல் அபிவிருத்தி சபையால் 14-8-2001 இல் நடாத்தப்பட்ட விழாவில் [illegible] வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவரது ஆக்கங்கள் பற்றிப் பேரதனைப் பல்கலைக்கழகத்தில் ஓர் ஆய்வு நடந்துள்ளது.

(தொடரும்)



சூழல் விழிப்புணர்வு மாதத்தை ஒட்டிய கவிதை

# வெளிவளர் காதல்

சுற்றிவரக் கடலாடை உடுத்தியவை எங்கள் தீவுகள்
நீலப்பட்டாடை நெளிதர
வெள்ளிச் சரிகை முகதலைப்பலைய
கொய்யக மடிப்புக் குலையாக் கடல் அழகிகள்
அழகிய எங்கள் தீவுகளின் அணிகலனே
இந்தக் கடலும் கடல்சார் கண்டல் தீவுகளும்தான்.

கடலலைகளின் காதல் பாட்டிலேதான்
நாம் கண்ணயர்வோம், கண்மலர்வோம்.
கடலாளயின் இசையார்ந்த கவிதை லயம்
ஒலித்தபடியேதானிருக்கும் போதிலும்
இவளின் இசையாழி மௌனம் எங்கள் நெஞ்சுகளில்
இயல்படுகை விரிக்கும்.

காவலாளிக்கடலாளியின் பிள்ளைகளாம் தீவுகள்
கடல்வெளித் தொட்டில்களாய் இசைவன
இசை பிசகாத தொட்டில்கள்.
எனக்கென்னவோ இந்தத் தொட்டில்கள் படுக்கைகளில்தான்
எமக்காக நாகரிகம் கன்னிக்கால் கொண்டதாய்த் தோன்றுகிறது.

2.
கடலோரத் தொட்டில் படுக்கையில் கண்மலர்ந்த
முதல் கனாவின் துளிர்
உப்பூறித் தடித்த கடலோரப் புல்வர்க்கங்களின் அல்லது
ஓடைக்கடலின் உள்வெளிகளில்
பச்சைக் கனவுகளால் இசைந்த கண்டல் தாவரங்களிலா?
எனது நினைவுகளோ காடாய் மண்டிய கண்டல் தாவரங்களில்தான்
கண் நனைகின்றன.
சிறுவயதின் கனவுகள் கண்ணடும்பியதும்
இந்தக் கண்டல் காடுகளில்தான்
கண்ணா, கிஞ்சா, தில்லை,திப்பரத்தை
எனப் பலவாய்த் திரண்ட கண்டல் காடுகளும் தீவுகளும்
எமக்காகக் கடலியற்கை தொடுத்திழைத்த காவல் வேலிகள்
மட்டுமல்ல , கனவுகள் இழைகிற வெளிகளும்தான்.
கார்காலத்து மழைநீரோடு கைகோர்த்து
கடலாளிகள் மெல்லலைகள் வளையவரும்
கண்ணாடி நீர்ச்சுனைகளாய் கண்டல் காடுகளுட் தேங்கும்
கனவுநுரைவரும் கன்னியென வெள்ளி நீர்க் கொலுசுகளை
மெல்லொலித்து உள்நுழையும் கடலாளின்
சிற்றலை பெயர்ப்பில் மீன்முட்டைகள் கண்ணுயிர்க்கும்.
வெள்ளிக் கொலுசுகளின் சந்தங்களை விழுங்கினாற்போல
சிற்றிறால் குஞ்சுகள் துள்ளிவிழும்.
காதல் சிறு நண்டுகள் சிணைகானும், ஈனும்
நூதனம் பார்த்தபடியே கண்ணாடிநீரின்
வெண்நுரையை அள்ளிப் பூசிச்சிறுவர் நாம்
புன்னகைகள் மிளுங்கும் பூரிப்பை எய்தியது இங்கேதான்
கடல்சார் கண்டல் காடுகளில் தான்.

3.
அப்போது நாங்கள் சிறுவர்கள்
ஒற்றையாய் சிறுவன் என்றழைப்பதில் எனக்குச் சம்மதமில்லை
கூடிக்கூடி கண்டல் காட்டகங்களில்
கனவுமுட்டைகள் இட்டதுவும்,
குஞ்சுபொரித்த கனவுகளுக்குச் செட்டைகள் முளைத்து
கடல் வெளிமுழுவதும் அளந்து திரிந்ததுவும்
ஒற்றை நிகழ்வா?
கூட்டிசைந்த பருவத்துக் குதூகலிப்புகள் அல்லவா!

அப்போது நாங்கள் சிறுவர்கள்
தான்தூங்கு மூஞ்சிகளல்ல. துடியாட்டக்காரர்கள்.
குஞ்சிறால்கள் போல துள்ளித் துடிப்போம்.
உந்தித் துள்ளி எங்கள் வீட்டுவண்டில் தட்டியைத் திறந்தால்
நேரிதான ஒழுங்கையின் நீள் தொடுகையில்
நீலத் திரைகடல் விரிப்பு.
கடலில் தொடுவானம் நோக்கியே எங்கள் பயணம்
காற்றாய் உந்திப் பறக்கும் எங்கள் சிறுவம்.

எங்கள் சிறுவம் இந்தக் கடல்வெளியாத்தது.
எங்கள் சிறுவம் இந்தக் கடல்காற்றில் விளைந்தது.
எங்கள் சிறுவம் இந்தக் கடலில்தான் நீச்சலடித்தது.
எங்கள் சிறுவம் இந்தக் கடல் உணவுகளையே உண்டு வளர்ந்தது.
இந்தக் கடலலைகளின் இரைச்சலுடன் போட்டியிட்டுத்தான்
எங்கள் சிறுவம் குரல் எழுப்பவும் பழகியது.
எங்களின் சிறு விளையாட்டுக்கள்
கிட்டிப்புள்ளு, தாய்ச்சி என விரிந்ததெல்லாம்
இந்தக் கடல்வெளி மணற்றிடல்களில்தான்.
சிற்றில் கட்டி நாம் விளையாடிய போதெல்லாம்
சிதைத்துப் போகும் சிற்றலைகளை நாம்
திட்டித் தீர்த்தால் கோபம் கொண்டவை
குமுறி எழுந்ததை நாம் அறிந்ததேயில்லை.
குழந்தை விரலெடுத்து கரையில் கோலம் போடுதலல்லாமல்

தவிச்ச விடாய்க்கதவாத் தண்ணி என்று கொப்பளித்து
உமிழ்ந்திருக்கிறோம் பலமுறை. ஓம் உண்மையில்
உப்புக்கரிக்கிற கடல்தான் இது.
ஆயினும், அதனருகில் , மண்வெளியில்
சிறுகையெடுத்த சிரட்டைகொண்டு தோண்டினால்
நன்னீர் உவந்தளிக்கும் நவிறாகரிகம்
இதன் கரைக்கு எப்படி வந்தது?
இப்படி நாம் வியந்த போதிலே எம்முள்ளும்
எட்டிப்பார்த்த நீர்ச்சுனையின் வியப்பில்
நாம் எதன் முகம் கண்டோம்?அதன்
சிற்றூறலுள்ளும் தெரிந்தது அந்தத் தொடுவானம் தானா?
எதையும் அறுதியிட்டுச் சொல்ல வியலாத வயசு.
புதைபொருள் ஆய்விற்கு இன்னும் காலமிருந்தது.
ஆனாலும் அதைவிட்டுப் பிரியவும் ஒருகாலம்
வந்துற்ற போதில் என்னுள் எட்டிப்பார்த்தது.
ஒரு மாபெரும் கடல்வெளி!
அலை வீசித்துயரெறியும் ஆழ்கடல்வெளி!
சின்னமனத்தகத்தின் சிற்றில் கனவுகளைச்
சிதைத்த துயர்வெளி.

விட்டுப்பிரிந்தோம்,
பட்டுச்சிறககளை உதிர்த்துவிட்டுத் துயரில்
மொட்டையாய் நின்றது இளம் மனப்பேடு
தன்னை முழுசுரித்து நின்ற மரம்போலத் துயர்சூழ
கடலோரத்தமர்ந்த அழகிய வீட்டையும்
முற்றத்து வேம்பையும் விட்டுவிட்டு
ஊரின் நடுக்குறிச்சியான சந்தையடிக்கு வந்தோம்.
சந்தையடியில் அப்பர் பெரிய கடை வியாபாரியானார்.
கனவுகள் சிதைந்த துயரவெளியிடை
தனித்துவிடப்பட்டவனானேன் நான்.
புத்தாக்கக் கனவுகள் வளர்க்கும் புறச் சூழலிங்கில்லை.
பக்கத்தில் அமைந்திருந்த உப்புக்கரைச்சி எனும்
வெறும் உவர்தன்ரவெளி என்னை ஈர்க்கவில்லை.
இது எனது கனவுதிர் காலமாயிருந்தது.

சு. வில்வரத்தினம். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரிய பிரஜையை விடுவிக்க நிபந்தனை;
# ஈராக்கிலுள்ள தென்கொரிய படைகள்
# உடனடியாக வெளியேற வேண்டும்!

## இஸ்லாமிய தீவிரவாதிகள் எச்சரிக்கை

ஈராக்கிலுள்ள தென்கொரியத் துருப்புக்களை 24 மணிநேரத்திற்குள் விலக்கவேண்டுமெனவும், இல்லையேல் கடத்தப்பட்ட தென்கொரியப் பிரஜை கொல்லப்படுவாரெனவும், இஸ்லாமிய தீவிரவாதிகள் தென்கொரிய அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அல்கொய்டா அமைப்பின் தலைவர்களில் ஒருவரான அபு முசாப் அல் சராவி தலைமையிலான ஜமாத் அல் - தாவ்கிட மற்றும் ஜிகாத் அமைப்புக்களினால் வெளியிடப்பட்ட வீடியோ நாடாவிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

தென்கொரியப் பிரஜையான கிம் சன் - கில் (வயது 33) என்பவர் ஈராக்கிலுள்ள, தென்கொரிய தனியார் நிறுவனமொன்றில் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றுகின்றார். இந்த நிறுவனம் அமெரிக்க இராணுவத்திற்குப் பொருட்களை விநியோகிக்கும் நிறுவனமாகும்.

இங்கு கடமையாற்றும் கிம் சன் கடந்த 17 ஆம் திகதி ஈராக்கின் பலூாஜா நகரில் வைத்துக் கடத்தப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் இவர் கடத்தப்பட்டது தொடர்பான வீடியோ நாடாவை வெளியிட்ட இஸ்லாமிய தீவிரவாதிகள், இவரை விடுதலை செய்யவேண்டுமெனில் ஈராக்கிலுள்ள தென்கொரியத் துருப்புக்கள் உடனடியாக வெளியேறவேண்டுமெனவும், மேலதிகமாக அனுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ள 3000 துருப்புக்களை அனுப்பக்கூடாதெனவும் நிபந்தனை விதித்துள்ளனர்.

கடத்தப்பட்ட தென்கொரியப் பிரஜை வீடியோ நாடாவில் - ஈராக்கிலுள்ள தென்கொரியப் படைகள் உடனடியாக வெளியேறவேண்டும். நான் உயிரிழக்க விரும்பவில்லை, எனது வாழ்க்கை மிக முக்கியமானது எனத் தெரிவித்தார்.

இரண்டு நிமிடங்களே காட்டப்பட்ட இந்த வீடியோ நாடாவில் தென்கொரியப் பிரஜை முன்னே அமர்ந்திருக்க இஸ்லாமிய குழுவைச் சேர்ந்த மூவர் அவரின் பின்னால் தமது முகங்




களை துணிகளால் மூடியபடி ஆயுதங்களுடன் நின்றுகொண்டிருந்தனர். இதேவேளை, தென்கொரிய வெளியுறவு அமைச்சர் பான் - கி - மூன், கடத்தப்பட்ட தென்கொரியப் பிரஜை விடுதலை செய்யப்படவேண்டுமெனவும் துருப்புக்கள் ஈராக்கிற்கு தீர்மானிக்கப்பட்டபடி அனுப்பப்படுவர் எனவும் தெரிவித்தார்.

தென்கொரிய அரசாங்கம் ஈராக் மக்களுக்கான உதவிகளை வழங்க முயற்சிப்பாதாகவும், பொருளாதாரம் மற்றும் புனர்வாழ்வு உதவிகளை வழங்கி அவர்களுக்கான வாழ்க்கைத் தரத்தை மேம்பாடடையச் செய்யவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஏற்கனவே 660 தென்கொரியத் துருப்புக்கள் ஈராக்கிலுள்ள நசிரியா நகரில் மனிதநேய மற்றும் புனர்வாழ்வு உதவிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் மேலும் 3000 துருப்புக்களை தாம் அனுப்பவுள்ளதாகவும் தென்கொரிய பாதுகாப்பு அமைச்சர் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பினையடுத்து மூன்று நாட்களின் பின்னர் இந்த கடத்தல் விவகாரம் வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## கிளின்ரனின் 'எனது வாழ்க்கை' அமெரிக்காவில் வெளியீடு




அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்ரன் எழுதிய "எனது வாழ்க்கை" என்ற புத்தகம் அமெரிக்காவில் நேற்று வெளியிடப்படவிருந்தது. இந்தப் புத்தகத்திற்கான முன்பதிவினை சகல புத்தக நிலையங்களும் ஆயிரக கணக்கில் செய்துள்ளதுடன், நள்ளிரவுவரை தமது விற்பனை நிலையங்களையும் திறந்து வைத்துள்ளன. இந்தப் புத்தகத்தில் மொனிக்கா லிவின்ஸ்கியின் விவகாரம் கூடுதலாக வாசகர்களால் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதி பதவியில் பலவீனமான நிலையில் தான் இருந்தபோதே லிவின்ஸ்கியின் விவகாரம் ஏற்பட்டதெனவும், இதனைத் தனது அரசியல் எதிரிகள் பூதாகரமான பிரச்சினையாக்கி விட்டார்கள் எனவும் கிளின்ரன், பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

மொனிக்கா லிவின்ஸ்கியுடன் ஏற்பட்ட இந்தப் பிரச்சினையால் எனது மனைவி ஹிலாரியுடனான குடும்ப வாழ்க்கை மிகமோசமான நிலைக்குச் சென்றபோதும், ஒரு வருடமாக நான் பெற்ற உளவியல் ஆலோசனைகளால் அந்த நிலை தவிர்க்கப்பட்டது என்கின்றார் கிளின்ரன்.

மொனிக்கா விவகாரத்தை நான் எனது மனைவியிடம் தெரிவித்தபோது அவர் என்மீது மிகவும் கோபமடைந்தார். அத்துடன் அவர் பைத்தியம் பிடித்தவர் போலக் காணப்பட்டார். இதை ஏன் எனக்கு முன்னரே கூறவில்லை என ஹிலாரி தன்னிடம் கேட்டதாக கிளின்ரன் தனது புத்தகத்தில் விவரித்திருக்கின்றார்.


தனது ஆட்சிக்காலத்தில் வெளிநாட்டுக் கொள்கை குறித்து தெரிவித்த கிளின்ரன் - மத்திய கிழக்கு பிரச்சினையை தீர்க்காமை, ஒஸாமா பின்லேடனைப் பிடிக்காமை என்பன மிகப் பெரிய வருத்தமளிப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்தப் புத்தகம் மிகவும் சலிப்பான நிலையிலுள்ளதாகவும், தன்னைத்தானே கிளின்ரன் கூறியுள்ளதாகவும் நியூயோர்க் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

இருந்தபோதிலும், முன்னைய தலைவர்கள் எழுதிய புத்தகங்களிலும் பார்க்க தனது புத்தகங்களில் நிறைய விடயங்களை தான் சொல்லியுள்ளதாக கிளின்ரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - 1994 ஆம் ஆண்டு இரண்டாவது போப் ஜோன் போல் எழுதிய ஒரு புத்தகம் 1.2 மில்லியன் அச்சிடப்பட்ட நிலையில் கிளின்ரனின் புத்தகம் 1.5 மில்லியன் அச்சிடப்பட்டுச் சாதனை படைக்கப்பட்டுள்ளது.

## ஐநூறு பலஸ்தீன தொழிலாளர்கள் இஸ்ரேலில் தொழில்புரிய அனுமதி



(டெல்அவிவ்)

கடந்த மூன்று மாதங்களின் பின் முதன் முறையாக பலஸ்தீனத் தொழிலாளர்கள் ஐநூறு பேர் காஸாப பகுதியிலிருந்து இஸ்ரேலுக்குத் தொழில்புரிவதற்கு இஸ்ரேல் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

ஹமாஸ் இயக்கத் தலைவர் ஷேக் அகமட யாசின் கொலைசெய்யப்பட்ட பின்னர் பலஸ்தீனத் தொழிலாளர்கள் இஸ்ரேலுக்குச்சென்று தொழில்புரிய இஸ்ரேல் முற்றாகத் தடைசெய்திருந்தது.

இது தொடர்பாக கருத்துத்தெரிவித்த இஸரேலிய இராணுவ அதிகாரி - காஸாப் பகுதியின் தற்போதைய பாதுகாப்பு நிலவரத்தினைக் கருத்திற்கொண்டே பலஸ்தீனத் தொழிலாளர்கள் அனுமதிக்கப்பட்டதாக தெரிவித்தார். காஸாப் பகுதியில் வாழும் பலஸ்தீனர்களில் பெரும்பாலானோர் தமது தொழில் வாய்ப்பிற்காக இஸ்ரேலையே நம்பியுள்ளனர்.

இவர்கள் இஸ்ரேலினுள் உட்பிரவேசிப்பது தடைசெய்யபபட்டமையினால் பலஸ்தீனர்களில் பெரும்பாலானோர் வேலையின்மைப் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளதனால் மூன்றில் இரண்டு பகுதி குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்கின்றனர்.

இந்த நிலையில் 500 தொழிலாளர்களை இஸரேல் செல்ல அனுமதி வழங்கியமையானது பலஸ்தீனத் தொழிலாளர்கள் மத்தியில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பலஸ்தீனர்களின் புரட்சிக்கு முன்னர் இஸ்ரேலில் தங்கி பல்லாயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் வாழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

ஹமாஸ் இயக்கத் தலைவர் ஷேக் யாசினின கொலைசெய்யப்பட்டதையடுத்து இஸ்ரேலில் ஹமாஸ் இயக்கம் பாரிய தாக்குதலை நடத்தும் என எதிர்பார்த்திருந்த நிலையில், தற்பொழுது பலஸ்தீனத் தொழிலாளர்களை இஸ்ரேலின் உள்ளே உள்வாங்குவது ஹமாஸ இயக்கத்தின் அச்சத்திலிருந்து இஸ்ரேல் விடுபட்டுள்ளமையை எடுத்துக்காட்டுகின்றது.

இஸ்ரேல் காஸாப் பகுதியில் இருந்து இராணுவத்தினரை விலக்கிக் கொள்வதாக உறுதியளித்துள்ளதால் காஸாப் பகுதியில் உள்ள இஸ்ரேலிய இராணுவம்மீது தாக்குதலை நடாத்தவேண்டாமென எகிப்து - ஹமாஸ இயக்கத்திற்கு அழுத்தம் கொடுத்து வருகின்றது.

பலஸ்தீனம் மீது தாக்குதல்களை இஸ்ரேல் நடாத்தியதால் பலஸ்தீனத்தின் பொருளாதாரம் மிகவும் நலிவடைந்து செல்வதாக அமெரிக்கா தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.




## பாகிஸ்தான் விமான நிலையம் மீது இனந்தெரியாதோர் றொக்கட் தாக்குதல்!

பாகிஸ்தானின் பலோசிஸ்தான் மாகாணத்திலுள்ள விமான நிலையம் மீது இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட றொக்கட் தாக்குதலில் விமானநிலையக் கட்டங்கள பலத்த சேதமடைந்தன.

இந்தச் சம்பவம் கடந்த சனிககிழமை இரவு இடம்பெற்றது. இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது-

பாகிஸ்தானின் மிகப்பெரிய வாயு நிரப்பு நிலையமும் இந்த விமான நிலையத்துடன் இணைந்ததாகவே உள்ளது. கடந்த சனிக்கிழமை இரவு பாகிஸ்தான் படையினர் வாயு விநியோகக் குழாய் மற்றும் விமானநிலையத்திற்கு பாதுகாப்பு வழங்கிக்கொண்டிருந்தனர்.

இந்தவேளையில் இனந்தெரியாதவர்கள் விமானநிலையத்தின் கட்டங்கள்மீது சுமார் 20 இற்கும் மேற்பட்ட றொக்கட் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதன் பின்னர் பாகிஸ்தான் படையினர் எதிர்ததாக்குதலை மேற்கொண்டவேளை, தாக்குதலை மேற்கொண்டவர்கள் தப்பியோடி விட்டனர். இதன்போது தாக்குதலை மேற்கொண்டவர்களுக்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் குறித்து தெரியவில்லையெனப் பாகிஸ்தான் பொலிஸார் தெரிவித்தனர். விமான நிலையத்திலிருந்த இரண்டு சிறிய அறைகள் றொக்கட் தாக்குதலால் முழுமையாகச் சேதமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனாலும், இந்தக் கட்டத்தைச் சுற்றிவர தாக்குதலை மேற்கொண்டவர்கள் வெடி பொருடகளை ஏற்கனவே புதைத்துவைத்துவிட்டு பின்னர் றொக்கட் தாக்குதலை நடத்திய வேளையிலேயே இந்த இரண்டு சிறிய அறைகளும் சேதமடைந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இஸ்லாமிய தீவிரவாதிகளைத் தேடி சவுதிப் படையினர் தொடர்ந்து வேட்டை



அமெரிக்கப்பொறியியலாளர் போல் ஜோன்சனின் படுகொலையையடுத்து, சவுதிப்படையினர் சவுதியில் ஒளிந்துள்ள இஸ்லாமியத் தீவிரவாதிகளை கண்டுபிடிப்பதற்கான மிகப்பெரிய தேடுதல் வேட்டையை ஆரம்பித்துள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக தலைநகர் றியாட்டிலுள்ள அல் - மலாஷ் மாவட்டத்தில் தேடுதல் நடவடிக்கைகளுக்காக பொலிஸ் மற்றும் ஆயுத வாகனங்கள் வீதிக்கு குறுக்கே நிறுத்தப்பட்டு போக்குவரத்து தடைசெய்யப்பட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் இரவு சவுதிப் படையினர் தேடுதல் மேற்கொண்டபின்னர் விலகிச்சென்றபோதிலும் யாரும் கைது செய்யப்பட்டார்களா என்பது இதுவரை தெளிவாகத் தெரியவில்லையென செய்திகள் தெரிவிக்கின்றன.

சவுதியின் ஸ்திரத்தன்மையைக் குலைப்பதற்கு எந்தவொரு ஆயுததாரிகளுக்கும் இடமளிக்கப்படமாட்டாதென சவுதி மன்னர் பாத் தொிவித்தார். உண்மையான முஸ்லிம்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபடமாட்டார்கள். அத்துடன், அவர்கள் இப்படியான செயல்களுக்கு தமது ஆதரவினை வழங்கமாட்டார்களெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இஸ்லாமியத் தீவிரவாதிகள் சரியான பாதைக்கு வராவிட்டால் அல்மொக்றீன் எந்த வழியைச் சந்தித்தாரோ, அதே வழியை இவர்களும் சநதிப்பார்களென இளவரசர் அப்துல்லா தெரிவித்தார். அல்மொக்றீன் உயிரிழந்தாலும், சவுதியில் தமது தாக்குதல் நடவடிக்கைகள் மேலும் அதிகரிக்குமென இஸ்லாமிய தீவிரவாதிகள் தெரிவித்தனர்.


## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

அரசாங்க மானியங்கள் - இது ஆண்டொன்றுக்கு 15 தொடங்கி 20 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது - உலக மீன்பிடித் தொழிலுக்கு 20 சதவீத வருமானத்துக்குக் காரணமாக இருக்கும் அதே சமயம் அளவுக்கு மிஞ்சிய மீன்பிடித்தலையும் ஊக்குவிக்கிறது.

உலகச் சூழல் தினம் - யூன் 05



World Environment Day - June 05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மட்டக்களப்பில் துப்பாக்கிச்சூடு இளைஞர் ஒருவர் படுகாயம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சின்ன ஊறணியில் நேற்று அதிகாலை இனந்தெரியாத நபரினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சின்ன ஊறணியைச் சேர்ந்த கால் நடை வியாபாரி மகேஸ்வரராஜா மன்சுதன் (வயது 28) என்பவரே காயமடைந்தவராவார்.

இளைஞர் வீட்டிலிருந்து வெளியே சென்ற வேளையிலேயே இனந்தெரியாத நபரினால் இவரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இடது காலில் மூன்று துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் ஏற்பட்டுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

# இலங்கைப் பெண்ணைக் கொன்று துண்டுதுண்டாக வெட்டிய இந்தியர்

மத்திய கிழக்கு நாடான சார்ஜாவில் வீட்டுப் பணிப்பெண்ணாக பணிபுரிந்த இலங்கைப் பெண்ணொருவரை அவருடன்கூட பணிபுரிந்த இந்தியர் ஒருவர் கொலை செய்தபின் அவரது உடலை துண்டுதுண்டாக வெட்டி உரப்பையினுள் மறைத்து வீதியோரக் குப்பைக்குள் வீசினார்.

இவ்வாறு கொலை முயற்சியில் ஈடுபட்ட இந்தியரை சார்ஜா பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கொலை செய்யப்பட்ட இலங்கைப் பெண்ணுடன் குறித்த இந்தியர் கடந்த ஒரு வருடமாக தங்கியிருந்ததாகவும் அவருடன் இணைந்து பல வீடுகளில் தொழில்புரிந்ததாகவும் சார்ஜா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பெண்ணைக் கொலை செய்த பின்னர் அவரது உடலை பல துண்டுகளாக வெட்டி உரப்பையினுள் போட்டுக் கட்டியுள்ளார். அதன்பின் உரப்பை அடங்கிய சடலப் பொதியை சார்ஜாவிலுள்ள அல் நசிறியாப் பகுதி வீதியோர குப்பையில் போட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை சார்ஜா மாநகர சபையின் சுத்திகரிப்பு தொழிலாளர்கள் வீதியிலுள்ள குப்பைகளை அகற்றும் போதே உரப்பையினுள் துண்டு துண்டுகளாகவெட்டப்பட்ட நிலையில் சடலம் கிடப்பதைக் கண்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண் யாரென இதுவரை அடையாளம் காணப்படவில்லையெனவும் சுமார் 30 வயது மதிக்கத்தக்கவரெனவும் வீட்டுப் பணிப்பெண்ணுக்குரிய விசாவை வைத்திருந்த இவர் சார்ஜாவில் பல வருடங்களாக தொழில் புரிந்தவரெனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்

இஸ்லாம் மதத்தைத் தரக்குறைவாக பேசியதாலேயே குறித்த பெண்ணை தான் கொலை செய்ததாக கைதுசெய்த இந்தியர் தெரிவித்தார். கைதுசெய்யப்பட்ட இந்தியர் தொடர்பான விபரங்களும் வெளிவரவில்லை.

# பல்கலைக்கழக தற்காலிக ஊழியர்களின் வேலைநீக்கத்தில் அரசியல் பின்னணி காரணமா?

## பேராசிரியர் சிவநாதன் சந்தேகம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வேலைநிறுத்தத்தில் பங்கேற்றதற்காக - யாழ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் 50 அமைய ஊழியர்கள் மற்றும் மீள் நியமனம் வழங்கப்பட்ட ஊழியர்களை பதவி நீக்கம்செய்த துணைவேந்தரின் நடவடிக்கையின் பின்னணியில் அரசாங்கம் இருந்திருக்கலாம் என்று யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தலைவர் பேராசிரியர் வி.பி.சிவநாதன் சந்தேகம் வெளியிட்டார்.

ஊழியர்சங்கம் நடத்தும் போராட்டம் குறித்தும், ஆசிரியர் சங்கம் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் குறித்தும் நமது ஈழநாடுவுக்கு நேற்றிரவு பேட்டியளித்தபோதே பேராசிரியர் சிவநாதன் இவ்வாறு சந்தேகம் வெளியிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் -

தற்காலிக ஊழியர்களை வேலைநிறுத்தம் செய்தது நிர்வாகத்தின் தன்னிச்சையான முடிவாகும். மானியங்கள் ஆணைக்குழு மூலம் இத்தகையதொரு நடவடிக்கை எடுக்கப்படுவதென்பது வேறு. நிர்வாகம் இவ்வாறு செய்தது மிகப்பெரிய தவறாகும்.

வேலைநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்குப் பதிலாக உடனடியாக ஆட்சேர்ப்புச் செய்ய மானியங்கள் ஆணைக்குழு அனுமதி தராது. தற்போது நியமனங்கள் யாவும் நிறுத்தப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில், இவ்வாறு வேலைநீக்கம் செய்ததால் புதியவர்களைச் சேர்ப்பதில் பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டிவரும்.

இவ்வாறு அமைய மற்றும் மீள் நியமனம் வழங்கப்பட்ட ஊழியர்களை துணைவேந்தர் பதவிநீக்கம் செய்தமை சந்தேகங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

இதன் பின்னால் அரசாங்கத்தின் கை இருந்திருக்கலாமோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

ஆட்சிமாற்றம் ஏற்பட்டிருக்கின்ற நிலையில் தமக்கு சார்பானவர்களை நியமனம் செய்வதற்காக - தற்காலிக ஊழியர்களை வேலைநீக்கம் செய்திருக்கலாம் எனவும் கருதத் தோன்றுகிறது.

பல்கலைக்கழக நிர்வாகத்தி னர் வேலைநிறுத்தம் செய்யும் ஊழியர்களை மட்டுமன்றி ஆசிரியர்களையும்கூட மதிக்கவில்லை என்றும் அவர் மேலும் குற்றஞ்சாட்டினார்.

## கருணா தப்பித்து...

என்பது குறித்து அலிசாகிர் மௌலானாவின் கருத்தில் இருந்து தெளிவாகவில்லை என்றும் -

ஒரு முன்னணி அரசியல்வாதி படையினருக்குத் தெரியாமல் போட்டிக் குழுத்தலைவர் ஒருவரை கொழும்புக்கு கொண்டுசென்றார் என்பதை நம்ப முடியாதிருப்பதாகவும் பி.பி.சி மேலும் தெரிவித்தது.

## இந்திய உதவியுடன்...

னப்படை இனிமேலும் தாமதிக்க வேண்டாம். அரசாங்கம் அந்தச் செலவுகளைப் பொறுப்பேற்கும் எனத் தெரிவித்தார்.

இதையடுத்து வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளப்பட்டதையடுத்து - தம்மால் 280 மில்லியன் ரூபாவுடன் விமான ஓடுபாதையை புனரமைத்து ஒளிவசதியைச் செய்துதருவதாக உறுதியளித்தனர்.

விமான ஓடுபாதை புனரமைப்புக்கு அரசாங்கத்தின் உதவி அவசியமானது. விமான ஓடுபாதை உடனடியாகச் செப்பனிடப்படவேண்டிய நிலையில் உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை விமானப்படை ஆறுவருடகால கடன் அடிப்படையில் சீனாவிடம் இருந்து கே 8 பயிற்சி விமானங்களை வாங்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புலிகள் பலமாக...

அப்போதே நாட்டின் பிரச்சினையை இலகுவில் தீர்க்கமுடியும். தன்னாட்சி அதிகாரத்தைப் பொறுத்தவரை முஸ்லிம் தரப்பும் அதில் உள்ளடக்கப்படுமானால் தமது ஆதரவு அதற்குக்கிடைக்கும்.

அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க வேண்டுமானால் நாடாளுமன்றத்தை அரசியலமைப்பு திருத்த சபையாக மாற்றுவதைக் கைவிடவேண்டும்.

அரசாங்கத்தின் தற்போதைய நடவடிக்கைகளை நோக்கும் போது நாட்டில் கௌரவமான சமாதானத்தினை நிலைநாட்டும் முயற்சிகளில் அவர்கள் ஈடுபடப்போவதில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும் போது முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு அந்தஸ்து பெற்றுத்தருவோம் என்று கூறியவர்கள் இன்று வாயடைத்து இருக்கிறார்கள்.

முஸ்லிம்களின் உரிமைகளை கருத்திற் கொண்டே தற்போது எதிர்க்கட்சியோடு முஸ்லிம் காங்கிரஸ் இணைந்துள்ளது. ஆனும் கட்சிக்கு ஆதரவு கொடுப்பதாக இருந்தால் அது நிபந்தனையின்டி படையிலேயே அமையும் எனத் தெரிவித்தார். (01)

## புலிகளுடன்...

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை அரசாங்கம் இதுவரை ஆரம்பிக்காததற்கு சரியான நிகழ்ச்சி நிரலை இதுவரை தயாரிக்காமையே காரணமாகும்.

அத்துடன் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையை சரியான தளத்திலிருந்து தொடர்வதற்கே அரசாங்கம் முயற்சிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தப்பித்துச்சென்ற கருணாவுக்கு...

போது தெரிவித்ததாவது,

கருணாவுடன் கொழும்பில் நுகேகொட எனுமிடத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பாதுகாப்பில் ஒரு வீட்டிலிருந்தோம். எங்களுடன் கருணாவின் மனைவியும் பிள்ளைகளும் இருந்தனர்.

அடிக்கடி டக்ளஸ் தேவானந்தா நுகேகொட வீட்டுக்கு வந்து கருணாவை சந்தித்துப் பேசுவார். அத்துடன் அவர்களிடையே தொலைபேசி தொடர்புகளும் இருந்து வந்தது.

அவர்களது நடவடிக்கைகள் செயற்பாடுகள் மூலம் ஒரு அரசியல் கட்சியை உருவாக்கும் திட்டம் காணக்கூடியதாக இருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தை விட்டு தப்பிச்செல்ல நேர்ந்தபோது மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானாவின் வாகனம் மூலமே தப்பிச்சென்றோம்.

நாங்கள் 4 பேரும் 17 ஆண்களுமாக மயிலவெட்டுவான் ஊடாக புலிபாய்ந்த கல்பாலம்வரை சென்றோம். அங்கு கருணா அலிசாகிர் மௌலானாவுடன் தொடர்பினை ஏற்படுத்தி வருமாறு சொன்னார்.

பின்னர் அலிசாகிர் மௌலானாவும் ஒரு பொலிஸ்காரரும் எங்களை கொழும்புக்கு ஏற்றிச்சென்றனர்.

கொழும்பு சென்ற நாங்கள் ஏப்ரல் 12 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதிவரை ஹில்டன் விடுதியில் தங்க வைக்கப்பட்டோம்.

பின்பு நுகேகொட எனுமிடத்தில் ஒரு வீட்டில் இராணுவ புலனாய்வுப் பாதுகாப்புப் பிரிவின் பாதுகாப்பில் தங்கவைக்கப்பட்டோம்.

ஒருநாள் விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவர் என்னுடன் தொடர்பு கொண்டு என்னை இணையுமாறு கேட்டிருந்தார். ஆனால் கூடிய பாதுகாப்பு போடப்பட்டிருந்ததால் தப்பிவர முடியவில்லை. பின்னர் எனது கையடக்கத் தொலைபேசியும் பறிக்கப்பட்டது.

எங்களை வீட்டுக்கு அனுப்பி வைக்குமாறு கூறியபோது உங்களை இந்தியா அல்லது வேறு வெளிநாட்டுக்கு அனுப்பிவைப்பதாக கருணா கூறினார்.

கருணா மூன்று மாதம் வெளிநாடு ஒன்றுக்கு சென்று தங்கியிருந்துவிட்டு பின் வருவதாகவும் குறிப்பிட்டார்.

பின்னர் கருணாவின்போக்கு எங்களுக்கு ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தியது. நாம் தனிமைப்படுத்தப்பட்டு எங்களை விட்டு செல்லும் ஏற்பாடு போலவே தோன்றியது.

கருணா எங்களை விட்டு விலகிய சந்தர்ப்பத்தை பார்த்து எனது உறவினர் ஒருவருடன் தொடர்பினை ஏற்படுத்தி பின்னர் குருநாகல் வரைக்கும் வந்தோம். அங்கிருந்து செங்கலடிக்கு வந்து விடுதலைப் புலிகளுடன் தொடர்பினை ஏற்படுத்தி இங்கு வந்துள்ளோம்.

கருணா என்ற தனிமனிதன் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கும், தமிழ் மக்களுக்கும் துரோகமிழைத்ததை இப்போது உணர்ந்துகொண்டோம்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற படுகொலைகளுக்கும் கருணாவுக்கும் தொடர்புகள் இருந்தன.

மட்டக்களப்பில் படுகொலைகள் இடம்பெற்ற பின்னர் கருணாவுக்கு தொலைபேசி அழைப்புக்கள் வரும்.

இந்தத் தொலைபேசி அழைப்புக்கள் மூலம் கொலை செய்யப்பட்டவர், கொலை செய்யப்பட்ட முறை தொடர்பாக கொலையாளிகள் கருணாவுக்கு தெரிவிப்பர். கருணா அதைக் கேட்டு குதுகலிப்பார். என அவர் மேலும் தெரிவித்தார்.

## நியாயமான கோரிக்கைகள்...

யர்களின் கேள்விகளுக்கு ஒளிவு மறைவின்றி பதிலளிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

நிர்வாகம் பிரச்சினைகள் குறித்து காலதாமதம் செய்து வருவதால் தான் சிக்கல் எழுவதாக இந்தக்கூட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது.

ஊழல்கள் தொடர்பாக ஊழியர்களால் கேள்வி கேட்கமுடியாது என்ற நிர்வாகத்தின் நிலைப்பாடு தொடர்பாகவும் கண்டனம் வெளியிடப்பட்டது.

நிதி தொடர்பான ஊழல்கள் குறித்து யாரும் கேள்விகள் கேட்கலாமென்றும் ஈகோட் இதற்கு இடமளிப்பதாகவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இடர்காலக் கொடுப்பனவு விடயத்தில் முறைகேடு நடந்திருப்பதான ஊழியர்களின் குற்றச்சாட்டுக்களில் உண்மை இருப்பதாகவும் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டனர்.

ஆசிரியர்கள் பலரின் இடர்காலக் கொடுப்பனவு விடயத்தில் முறைகேடு இடம்பெற்றிருந்த போதும், அது குறித்து தாம் பெரிதுபடுத்தவில்லை என்றும், இதேநிலையில், இந்த முறைகேட்டை எதிர்த்து ஊழியர்கள் போராட்டம் நடத்துவது நியாயமானது என்றும் கருத்து முன்வைக்கப்பட்டது.

ஊழியர்களின் வேலை நிறுத்தத்துக்கு வலுவான காரணங்கள் இருப்பதாகவும், ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால், மாணவர்களின் நலன் கருதி ஆசிரியர்கள் தமது பணியை கடும் நெருக்கடிக்குள்ளும் செய்துவருவது குறித்தும் இந்தக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

தொடர்ந்தும் இவ்வாறு நெருக்கடிகளுடன் - ஊழியர்களின் வேலைபளுவையும் ஆசிரியர்கள் சுமந்து பணியாற்றுவது முடியாதென்பதால் நிர்வாகத்தை இணக்கத்துக்கு வருமாறு இன்றைய சந்திப்பில் வலியுறுத்துவதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

இன்று துணைவேந்தருடனான சந்திப்பில், ஊழியர்களின் நியாயமான பிரச்சினைகள் தொடர்பாக அவர்களுடன் பேச்சுநடத்த ஆசிரியர் சங்கம் வற்றுபுறுத்துவதுடன் - இப்பேச்சுக்களின் நடுநிலையாளராகப் பங்கேற்கத் தயாராக இருப்பது குறித்தும் தெரியப்படுத்தும்.

நிர்வாகத்தின் கருத்து அறிந்த பின்னர் ஆசிரியர் சங்கம் இன்று விரிவான அறிக்கை ஒன்றை வெளியிடும் என்றும் தெரியவருகிறது.

சாவகச்சேரியில்
தர்சன் தொலைத்தொடர்பகம் & PHONE SHOP
24 மணி நேர சேவை
❋ தொலைபேசி அழைப்புக்கள்
❋ பக்ஸ்
❋ போட்டோப் பிரதி
❋ லெமினேற்றிங்
❋ விமான ஆசனப்பதிவுகள்
❋ வான், பஸ் ஆசனப்பதிவுகள்
❋ சீடி றைற்றிங்
❋ சீடி வகை, பிளப்பி வகைகள்
❋ முத்திரைகள், உறைகள்
❋ தொலைபேசிகள்
❋ தொலைபேசி அட்டைகள்
❋ கவர்கள்
❋ பற்றரிகள்
❋ சார்ஜ்சர்கள்
❋ பட்டிகள்
❋ ஸ்ரிக்கர்கள்
குளிரூட்டப்பட்டது
போன்ற சேவைகளுடன் Dialog GSM
Kit
Tel/Fax: 060 2212538
Tel: 077 7759074
Mobile: 077 6525257
❋ டயலொக் தொலைபேசிக்குரிய Kit அட்டைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
❋ சிம் காட்டுகளும் பெற்றுக்கொள்ளலாம்.
(சி/2684)
சங்கத்தானை, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.